# மக்கள் விரோத வேலை நிறுத்தம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
1981-2-

பிரதமர்
ஆர். பிரேமதாச

331.892
PRE
AR/DB

331·07
PRE AR|PB
9851

# மக்கள் விரோத வேலை நிறுத்தம்

கௌரவ சபாநாயகர் அவர்களே, தற்போதைய வேலைநிறுத்தம் பற்றி இரு அங்கத்தவர்கள் எமது கவனத்தை ஈர்த்துள்ளனர். இவ்விடயத்தைச் சபையில் தாங்கள் எழுப்பப்போவதாக அவர்கள் எனக்கு அறிவித்திருந்தனர். வேலைநிறுத்தம் தொடர்பாக இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது, என்பது பற்றி கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. எனவே, இதுபற்றி ஓர் விளக்கம் அளிக்க விரும்புகிறேன்.

1980 யூன் 5 ஆம் திகதி எதிர்க்கட்சியைச் சேர்ந்த சில தொழிற்சங்கங்கள் அரசாங்க எதிர்ப்புத் தினம் நடத்தியமை உங்களுக்குத் தெரியும். இது தொடர்பாக யூலை 4 ஆம் திகதி ஊழியர்களுக்குத் தொல்லை கொடுத்தார்கள் போன்ற புகார்களை அடுத்து இரத்மலானை புகையிரத வேலைத்தலத்தில் உள்ள 12 பேரைத் தற்காலிக வேலைநிறுத்தம் செய்யவேண்டி ஏற்பட்டது. பின்னர் இது தொடர்பாக விசாரணை ஒன்று நடத்தப்பட்டது. அதன் பின்னர் இப் 12 பேரையும் மீண்டும் வேலையில் சேர்க்கும்படி கோரி யூலை 7 ஆம் திகதி இரத்மலானை புகையிரத வேலைத்தலத்தில் வேலைநிறுத்தம் ஆரம்பிக்கப்பட்டது. இதனையடுத்து மேலும் பல கோரிக்கைகள் இதனுடன் சேர்த்துக் கொள்ளப்பட்டன. மாதாந்த வேதனம் 300 ரூபாவினால் அதிகரிக்கப்பட வேண்டுமென்றனர். அதே போன்று அதிகரிக்கும் வாழ்க்கைச் செலவுச் சுட்டெண் ஒவ்வொன்றிற்கும் 5 ரூபா மேலதிகமாக வழங்கப்படவேண்டும் எனக் கோரினர். யூலை மாதம் 11 ஆந் திகதி சிறிலங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, கம்யூனிஸ்ட் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, போன்றன இவ்வேலை நிறுத்தத்துக்கு ஆதரவு தெரிவித்து ஒரு கூட்டறிக்கையை வெளியிட்டன. யூலை மாதம் 13 ஆந் திகதி தொழிற்சங்க கூட்டுச் செயற்குழு பொது வேலைநிறுத்தம் ஒன்று மேற்கொள்ளப்படுவது பற்றி அறிவித்தது. இவ்வேலை நிறுத்தம் சட்ட விரோதமானதென்றபடியால் 16 ஆந் திகதி அரசாங்கத்தால் பொது ஜனப் பாதுகாப்புச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது. 18 ஆந் திகதி சில அலுவலகங்கள், கூட்டுத்தாபனங்கள், அரச திணைக்களங்கள், அதே போன்று சில தனியார் துறைத் தாபனங்களில் சில பகுதி ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். எமக்குக் கிடைத்துள்ள புள்ளி விபரங்களில் அடிப்படையில் அரச திணைக்களங்களிலும் கூட்டுத்தாபனங்களிலும் தனியார் துறையின் சில நிறுவனங்களிலுமாக இவ்வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டோர் என்

1—ஏ 50718–25,000 (07/80)

ணிக்கை 40, 356 ஆகும். புகையிரதத் திணைக்களத்தில் சுமார் 26,000 ஊழியர்கள் உள்ளனர். இவர்களுள் 10,102 பேர் வேலை நிறுத்தத்தில் ஈடு பட்டுள்ளனர். இ. போ. ச. வில் சுமார் 60,000 பேர் தொழில் புரிகின்றனர். இதில் வேலைநிறுத்தம் செய்தோரின் எண்ணிக்கை 1922 ஆகும். தபால் திணைக்களத்தின் 35,000 ஊழியர்களுள் 449 பேர் வேலைநிறுத்தத்தில் ஈடு பட்டுள்ளனர். கல்வித் திணைக்களத்தில், பயிற்சி பெறும் ஆசிரியர்களுள் 767 பேரும் 400 ஆசிரியர்களும் வேலைநிறுத்தம் செய்துள்ளனர். இவ்விரு சேவைகளிலும் மொத்தமாக உள்ள ஆசிரியர் எண்ணிக்கை 1,53,000 ஆகும். இதில் 1,167 பேர் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். அரச அச்ச கத்தில் உள்ள 3800 ஊழியர்களுள் 1282 பேர் வேலைநிறுத்தம் செய்துள்ள னர். அரசாங்க தொழிற்சாலையிலுள்ள முழு ஊழியர் எண்ணிக்கை எனக் குக் கிடைக்கவில்லை. அங்கு 2000 பேர் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள னர். லிகிதர்கள், சிறு சேவகர்கள் 347 பேர் இதில் அடங்குகின்றனர். ஏனைய அரசாங்க திணைக்களங்களின் கிளைக் காரியாலயங்களில் 14,497 பேர் உள்ளனர். கூட்டுத்தாபனங்கள் தனியார்துறைகளில் 7,295 பேர், மாநகர சபைகள், நகர சபைகள், கிராம சபைகள் போன்ற உள்ளூராட்சி நிறுவனங்களில் 1565 பேர். மத்திய வங்கியின் 1886 ஊழியருள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளோர் எண்ணிக்கை 67 பேர் ஆகும். இவற்றை எல்லாம் கூட்டிப்பார்க்கையில் சுமார் 40,356 பேர் வேலைநிறுத்தத்தில் ஈடு பட்டுள்ளதாகத் தெரிகிறது. இவர்கள் பல்வேறு தொழிற்சங்கங்களையும் சேர்ந்தவர்கள். தொழிற்சங்க கூட்டுக் கமிட்டியில் இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனம், இலங்கைத் தொழிலாளர் சம்மேளனம், அரச சேவை தொழிற்சங்க சம்மேளனம், பொது எழுதுவினைஞர் சேவைச் சம்மேளனம், உள்ளூராட்சி தொழிற்சங்க சம்மேளனம், இலங்கை சுதந்திர தொழிற் சங்க சம்மேளனம், அரச தொழிலாளர் தொழிற் சங்க சம்மேளனம், அகில இலங்கை அரசாங்க எழுதுவினைஞர் சங்கம், ஜாதிக குரு சங்கமய என் பன அடங்குகின்றன. இவற்றைச் சேர்ந்த ஊழியர்கள் வேலைநிறுத்தத் தில் ஈடுபட்டுள்ளனர்.

சபாநாயகர் அவர்களே, இச்சபையிலுள்ள கௌரவ அங்கத்தவர்களுக் கும் இச்சபை மூலமாக நாட்டிற்கும் நான் கூறவிரும்புவது என்னவெனில் இவ்வேலைநிறுத்தம் பூரணமாக சட்ட விரோதமானதென்பதாகும். இவ் வேலைநிறுத்தம் ஆரம்பித்த முறைபற்றி நான் தங்களுக்கு விளக்கினேன். இவ்வேலைநிறுத்தம் அரச விரோத தினத்தில் நடைபெற்ற ஒரு சம் பவத்தை அடுத்தே ஆரம்பித்தது. இத்தினத்தில் நடைபெற்ற ஒரு சம் பவத்தை அடுத்து இரதமலானை புகையிரத வேலைத்தலத்திலுள்ள 12 ஊழி யர்களை தற்காலிக வேலைநிறுத்தம் செய்யவேண்டி ஏற்பட்டது. இது

தொடர்பாக விசாரணை ஒன்று நடைபெற்றது. வேலைநிறுத்தம் செய்யப்பட்டோர் மீண்டும் வேலைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற கோரிக்கையுடன் வேலைநிறுத்தம் ஆரம்பித்தது. அப்படியன்றி இப்போது இவர்கள் காட்ட முயற்சிப்பது போன்று தொழிலாளரின் சம்பள அதிகரிப்பு அதேபோன்று ஏனைய கோரிக்கைகளை முன்வைத்து தொழிலாளர்களது ஏனைய பிரச்சினைகள் பற்றிக் கலந்தாலோசித்து தொழிலாளரின் சம்மதத்துடன் நியாயமான வழிவகைகளில் அவற்றை அரசாங்கத்தின் பரிசிலனைக்குச் சமர்ப்பிக்கும் முயற்சிகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை.

உண்மையில் எமக்கு நன்கு நம்பகமான வட்டாரங்களில் இருந்து கிடைக்கும் தகவல்களின்படி இவ்வேலைநிறுத்தத்தை இந்த முறையில் ஆரம்பிக்கத் திட்டமிட்டிருக்கப்படவில்லை. அரசாங்கத்திற்கு விரோதமாக அரசியல் ரீதியான சவாலை விடுப்பதற்கு இவர்கள் எதிர்பார்த்திருந்தனர். மே தின வைபவங்களின்போது இது எமக்கு விளங்கிற்று. இம் மே தினத்தன்று எதிர்க்கட்சிகளின் சில அரசியல் தலைவர்கள் பேசிய சில பேச்சுக்களை இன்னும் நாம் படித்துப்பார்த்தால் அவற்றைக் கேட்டுப்பார்த்தால் என்ன நோக்கத்துடன் இப்பேச்சுக்கள் நிகழ்த்தப்பட்டன என்பது விளங்கும். இது தொழிலாளர்கள் மீது ஏற்பட்ட பெரும் கருணையாலோ அல்லது இரக்கத்தாலோ மேற்கொள்ளப்பட்ட ஒரு வேலைத்திட்டம் அல்ல என்பது இதிலிருந்து விளங்கும். மே மாதம் 1 ஆந் திகதியை அடுத்த 1 வார காலத்துள் ஆனமடுவ உபதேர்தல் நடைபெறவிருந்தது இவ்விடைதேர்தலில் வெற்றி பெறலாம் என ஸ்ரீ. ல. சு. க. நம்பி இருந்தது. இங்ஙனம் நம்பிக்கை வைப்பதில் தவறேதும் இல்லை. இந்நம்பிக்கையை ஏற்படுத்த இரு காரணங்கள் இருந்தன. இருபது வருட காலமாக ஐ. தே. கட்சிக்கு எதிராக வாக்களித்து வந்த ஒரு பகுதி இது என்பது ஒன்று. 1977 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் முழு இலங்கையிலும் ஐ. தே. கட்சிக்கு பெரு வெற்றி கிடைத்த பொழுதிலும் ஆனமடுவவில் இக்கட்சி வெற்றிபெற முடியாமல் போனமை இதற்கு ஆதாரமாகும். இதுவே பிரதான காரணமாகும். இரண்டாவது காரணம் 1977 ஆம் ஆண்டு ஐ. தே. க. அரசாங்கம் பெரு வெற்றி பெற்ற போது முழுஉலகிலும் காணப்பட்ட பொருளாதார நிலைமையிலும் மாற்றமான ஒரு நிலைமை 1980 ஆம் ஆண்டு காணப்பட்டது. இம்மாற்றமானது உலகின் எந்த நாட்டினும் தவிர்த்துக்கொள்ள முடியாத ஒன்ருகக் காணப்பட்டது. முதலாளித்துவ நாடாக இருந்தால் என்ன ஜனநாயக நாடுகளாக இருந்தாலென்ன சோசலிச நாடுகளாக இருந்தாலென்ன எல்லா நாடுகளுக்கும் இவ்விஷயம் நன்கு விளங்கியிருந்தது. பொருளாதார விற்பன்னர்கள் இப்பிரச்சினைக்குப் பல பதங்களைப் பிரயோகித்தனர்.

சிலர் இதனை பணவீக்கம் என்றனர். பணவீக்கம் என்பது இவ்வுலகில் சாதாரணமாக காணப்படும் ஒன்று. சில சந்தர்ப்பங்களில் இது மிக வேகமாக உருவாகிவிடும். காற்று எப்போதும் காணப்படும் ஒன்று. சில சந்தர்ப்பங்களில் சில பகுதிகளில் வேகமாக வீசும். சில இடங்களில் குறைவாக வீசும். அது என்றும் எங்கும் இருக்கும். இது காற்றுக்குள்ள ஒரு இலட்சணம். காற்றின்றேல் மனிதர்களால் உயிர் வாழ முடியாது. பணவீக்கமும் இப்படிப்பட்டது. காற்று அவசியமாயிருப்பது போன்றே பணவீக்கமும் ஓரளவுக்கு அவசியமானதாகும்.

சபாநாயகர் அவர்களே, நான் அற்புதமான கட்டுரையொன்றை வாசித்தேன். யூலை மாதம் 6 ஆந் 12 ஆந் திகதிகளுக்கிடையில் வெளியான இலஸ்டிரேட்டர் வீக்லி ஒவ் இந்தியா எனும் ஒரு சஞ்சிகையில் அது வெளிவந்தது. இதில் ஒரு பகுதியை மாத்திரம் நான் இங்கு வாசிக்க விரும்புகிறேன். இச்சஞ்சிகையின் 10 ஆம் பக்கத்தில் பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது :—

விலை ஏற்றம், விலை ஏற்றம், விலை ஏற்றம், விலை ஏற்றம்.

குறைந்தது சில வருடங்களின் முன்பு பொருளியலாளர்கள் பின்வருமாறு விவாதிப்பதைப் பழக்கமாகக் கொண்டிருந்தனர். அதாவது "பொது மக்களுக்குப் பணவீக்கமானது குறித்த சில கஷ்டங்களை உருவாக்குகிறதைக் காண்கிறோம். ஆனால் மக்கள் இவற்றைத் தாங்கிக் கொள்ள வேண்டும். ஏனெனில் பணவீக்கத்தினை எதிர்நோக்காமல் எங்கள் நாட்டிற்கு அத்தியாவசிய தேவையான அபிவிருத்தி சமூக நீதித் திட்டங்களுக்கு பாரிய முதலீடுகளை பெற்றுக்கொள்வது முடியாத காரியம்."

"பணவீக்கமானது உலகின் எல்லா நாடுகளிலும் காணப்படும் உலகளாவிய ஒன்றாகும். எனவே இந்தியா எவ்வாறு அதிலிருந்து தப்ப முடியும்? அது தவிர்க்க முடியாதது. இப்பிரச்சினையைத் தீர்க்க முன்வைக்கப்பட்ட எல்லாத் தீர்வுகளும் ஏதாவது கஷ்டங்களை ஏற்படுத்தவே செய்கிறது. ஆகவே நாம் இதைப்பற்றி ஏதாவது செய்யநடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கும் அதேவேளை, நீங்களும் அதிக முறைப்பாடுகள் இன்றி அதனுடன் வாழப் பழகிக்கொள்ளுதல் நன்று."

பணவீக்கம் பற்றியே இங்கு குறிப்பிடப்படுகின்றது. பணவீக்கம் என்றால் என்ன என்பதை விளக்குவதாயின் சபாநாயகர் அவர்களே, உள்ள பணத்தின் அளவுக்குச் சமமாக பொருள் உற்பத்தி அளவு இல்லாதிருத்தல் என நாம் விளக்க முடியும். எனவே இதனை எதிர்

நோக்கக்கூடிய முக்கியமான வழி உற்பத்தியாகும். நாட்டின் மூலப் பொருள் வளங்களைப் பிரயோகத்திற்கெடுத்து விவசாய கைத்தொழில் உற்பத்திகளை மேற்கொள்வதை இது குறிக்கிறது.

அப்படியானால் இவர் கூறுவது என்ன? பலபொருளாதார விற்பன்னர்கள் இதனை விசேஷமாக விளக்கிருக்கிறார்கள். இதனால் பல சந்தர்ப்பங்களில் பொதுமக்களுக்குப் பிரச்சினைகள் தோன்றியுள்ளன. எனினும் பாரிய அபிவிருத்தித் திட்டங்கள், முதலீட்டுத் திட்டங்கள் என்பனவற்றை மேற் கொள்கையில் இத்தகைய நிலைமைகளை எதிர்நோக்குதல் தவிர்க்க முடியாது. அபிவிருத்தி, சமூக நீதி அதாவது தொழில் வாய்ப்புக்கான திறனை உருவாக்கல் போன்ற திட்டங்களினை அமுலாக்கும்பொழுது இது சிறப்பாகத் தென்படும். 11 ஆம் பக்கத்தில், இப்பணவீக்கமானது உலக ளாவிய ஒன்றென்பது குறிப்பிடப்படுகின்றது. இதற்காக முன்வைக்கப் படும் எல்லாத் தீர்வுகளின்போதும் சில நெருக்கடிகள் பிரச்சினைகள் உருவாகலாம் என்பதும் அங்கு குறிப்பிடப்படுகிறது.

ஆகவே இதைப்பற்றி நாம் ஏதாவது செய்வோமானால் அப்பொழுது அதிக முறைப்பாடுகள் இன்றி இதனுடன் நீங்கள் வாழப்பழகிக் கொள்ளுதல் நன்று. 1980 ஆம் ஆண்டு மே மாதம் 1 ஆம் திகதி அளவில் இத்தகைய நிலைமை உலகெங்கும் மட்டுமன்றி இலங்கையிலும் காணப் பட்டது. நாம் திட்டமிட்டிருந்த எல்லா நடவடிக்கைகளுக்கும் ஒதுக்கப் பட்ட பணம் பன்மடங்காக அதிகரித்தது. 1977 ஆம் ஆண்டு நாம் இந் நாட்டினைப் பொறுப்பேற்று, இந்நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானித்தபொழுது இருந்த செலவினங்களைப் பார்க்க இன்று இச் செலவினங்கள் 10, 12 மடங்காக அதிகரித்துள. இது அபிவிருத்தித் திட் டங்களால் ஏற்பட்ட பிழையன்று. உலகில் பொருள் பண்டங்களின் விலை யேற்றத்தால் ஏற்பட்ட ஒரு விளைவு. குறிப்பாக எரிபொருள், பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் போன்றவற்றின் விலைகள் அதிகரித்தன. இது ஒரு குறித்த நாட்டிற்கு மாத்திரம் உரித்தானதன்று. முழு உலகும் இதனை எதிர்நோக்க வேண்டும். விசேடமாக உணவுப் பொருள்களதும் மற்றும் பல்வேறு உற்பத்திப் பொருள்களதும் விலைகள் அதிகரித்தன. மிக வறிய நாடுகளில்—பொருளாதாரத்தில் தன்னிறைவு பெற முயற் சிக்கும் வளர்முக நாடுகளில் இப்பிரச்சினை வலிமையானதாகக் காணப்பட் டது. ஏற்கனவே காணப்பட்ட பொருளாதார அமைப்பை மாற்றிய மைத்து "நாம் முன்னேறிச்செல்வோம். உலகில், பொருள் பண்டங்களின் விலைகள் அதிகரிப்பதைத் தவிர்க்க முடியாவிட்டால் நாம் வருமானத் தைப் பெருக்கிக்கொள்வதற்கான வழிவகைகளை உருவாக்குவோம்"

என்ற நோக்கத்துடன் செயல்பட்ட நாடுகளையே இப்பிரச்சினை அதிகமாக எதிர்நோக்கியது. நாட்டினை அபிவிருத்தி செய்யவும் வருமான வழிவகைகளைப் பெருக்கவும் எமது அரசாங்கம் நடவடிக்கைகள் மேற்கொண்டது.

30 வருடங்களில் முடிக்கப்படவிருந்த மகாவலித்திட்ட வேலைகள், 5 அல்லது 6 வருடங்களுள் நிறைவு செய்யப்படவேண்டும் என்று இவ்வரசாங்கம் துணிவுடன் தீர்மானித்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது. 1977 ற்கும் 1980 இற்கும் இடைப்பட்ட காலத்துள் பொருள் பண்டங்களின் விலைகள் எவ்வளவு தூரம் அதிகரித்துள்ளன என்பதைக் கவனித்துப்பார்க்குங்கால் உண்மையில் நாம் அன்று எடுத்த தீர்மானம் சரி என்பதை எவரும் ஒப்புக்கொள்ளுவார்கள். இன்று 10 அல்லது 15 வருடங்களுள் இதைவிட வேறுபட்ட ஒரு நிலைமை உருவாகும். அப்போது இச்செலவுகள் மேலும் பன்மடங்கு அதிகரிக்கும்.

இங்கு நான் சிறந்த ஒரு உதாரணத்தைக் காட்ட முடியும். சீதுவையில் 8040 வீடுகளைக் கட்ட 1978 ஆம் ஆண்டு அரசாங்கம் டெண்டர் கோரியது. பல நாடுகளில் இருந்து இதற்கான விண்ணப்பங்கள் வந்தன. இறுதியாகக் கொரிய ஸ்தாபனமொன்றிற்கு டெண்டர் வழங்கப்பட்டது. ஒக்ரோபர் அளவில் எல்லா வீடுகளும் அமைத்து முடிக்கப்பட்டுவிடும். இப்போதும் 2040 வீடுகளின் வேலைகள் முடிவுற்றுள்ளன. சிற் சிறு வேலைகள் மாத்திரமே மிகுதியாக உள்ளன. ஜனாதிபதியுடன் அண்மையில் அவ்வேலைகளைப் பார்வையிட நாம் அங்கு சென்றோம். அது ஓர் மிக அழகான காட்சி. அண்மைக்காலத்தில் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட ஆகப் பெரிய வீட்டுத் திட்டம் அது. அது ஒரு சிறிய நகரம்போல் காட்சியளிக்கிறது. நகருக்கான எல்லா வசதிகளும் அங்குள்ளன. வீடுகளைக் கட்டியதற்கு மாத்திரமின்றி அங்குள்ள பாடசாலைகள், விளையாட்டு மைதானம், என்பனவற்றையும் இலவசமாக அமைத்துத்தந்தமைக்கு நான் அந்த தாபனத்திற்கு நன்றியுள்ளவனாயிருப்பேன். 2,000 குடும்பங்கள் இங்கு குடியமர்த்தப்படவுள்ளன. இக்குடும்பங்களின் பிள்ளைகளுக்கு கல்வி போதிக்கப் பாடசாலைகள் தேவை. இதனை நாம் கருத்தில் கொண்டு அக்கம்பக்கத்தில் உள்ள பாடசாலைகளை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளோம். இந்த அழகான காட்சியை நேரம் இருக்கும் போது சீதுவைக்கு வந்து பார்வையிடுமாறு நான் சபை உறுப்பினர்களை வேண்டுகிறேன். நல்ல கட்டடப்பொருட்களைப் பாவித்து மிக அழகான இக்கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதனைப் பார்க்கும்வரை இதன் பெறுமதி ஒருவருக்கும் தெரியாது. வீட்டுக்குள் புகுந்ததும் மத்திய மண்டபம் காணப்படுகிறது. மேல் தட்டில் இரு அறைகள் உள்ளன. அறைகள் இருப்பது மேல்தட்டில் மாத்திரம்தான். மலகூடவசதிகள் போன்ற எல்லா வசதிகளும் இங்குள்ளன. 1978 ஆம் ஆண்டில் இதற்

கான கொந்தராத்து கைச்சாத்திடும் பொழுது இதற்கான பெறுமதி 58,000 ரூபாவாகக் காணப்பட்டது. ஆனல் இன்று கிராமப் பகுதிகளில் ஒரு சிறு வீட்டை அமைப்பதாயின், அங்கு குடியிருக்க வருவோரின் உதவியைப் பெற்றுக்கொள்ளாது அவற்றை அமைக்க முயபின் 50,000 ரூபாவிற்காவது அதனை அமைக்கலாம் என நாம் எதிர்பார்க்கவில்லை. ஆனல் நவீன வசதிகளுடன் கூடிய இரு அறைகளைக் கொண்ட இந்த வீடுகளை அமைக்க 58,000 ரூபா மாத்திரமே செலவாகியது. இது தவிர காரை விடுவதற்கான கராஜ் வசதியுடன் கூடிய அதிக அறைகள் கொண்ட மேலும் சுமார் 200 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இவ்வீடு எல்லாவற்றிற்கும் 1,10,000 ரூபா மட்டும் செலவாகியுள்ளது. 50,000 ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட அவ்வீடுகளை இன்று 3 அல்லது 4 இலட்சம் ரூபாவுக்கு எவரும் விலைகொடுத்து வாங்குவர். அதேபோல 1 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் 7 அல்லது 8 இலட்சம் ரூபா பெறுமதி வாய்ந்தவை. அன்று 1 இலட்சம வீடுகளை அமைப்பதற்கான திட்டங்களையிட்டுத் துரிதமாக நாம் அதனைச் செயற்படுத்தாதுபோயின் இன்று இவ்வீடுகளை அமைப்பதற்கான செலவுகள் 3 அல்லது 4 மடங்காக அதிகரித்திருக்கும். நான் உண்மை நிலையை விளக்கவே இதனைச் கூறினேன். மகாவலித் திட்டம் ஏனைய கைத்தொழிற் திட்டங்கள் என்பவற்றின் நிலைமையும் இதுவே. துரிதமாக நாம் பல விஷயங்களைச் செயற்படுத்தியபடியால் இன்று மக்கள் தம் கண்களால் பார்க்கக்கூடிய பல விஷயங்கள் நாடெங்கும் காணப்படுகின்றன.

சபாநாயகர் அவர்களே, இந்நாட்டின் அண்மைக்கால வரலாற்றில் பல வருடகாலமாக நடைபெற்றிருந்த பல பெரும் வேலைத்திட்டங்கள் நாடு பூராவும் பாரிய அடிப்படையில் இப்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதொன்று சம்பளம் பெறும் தொழில்கள் மட்டுமன்றி பெரும் தொகையானேர் சொந்தத் தொழில்களிலும் ஈடுபட்டிருக்கின்றனர். ஆற்றிலிருந்து மண் எடுப்போர் முதல் செங்கல் செய்யும், ஓடு உற்பத்தி செய்யும், சுண்ணும்புக்கல் சுடும், மேசன் தொழில் புரியும், மர வேலைத்தொழில் புரியும், எல்லாத் தரங்களிலும் தொழில் புரியும் சுமார் 5.000 ற்கும் அதிகமானேர் இன்று சீதுவையில் காணப்படுகின்றனர். சபாநாயகர் அவர்களே கட்டடங்களை நிர்மாணிக்கும் இந்த நிறுவனத்திடம் தொழிற்பயிற்சி அளிக்கவென நிலையமொன்றை உருவாக்கித் தருமாறு நான் கோரியிருந்தேன். அவர்களது பயிற்சி நிலையங்கள் உலகெங்கும் பல இடங்களில் காணப்படுகின்றன. இதனல் அவர்களுக்கு இந்த இடங்களுக்குப் போகவேண்டி ஏற்படுகிறது. இந்நிலையங்களிலிருந்து வேலை பெற்றுச் செல்வோருக்குப் பதிலாக புதியவர்களை பயிற்சிக்குச் சேர்த்துக்கொள்ள முடியும். இவர்களுக்குத்தான் அத்தனகல்ல,

பொக்குணுவத்தையில் 2,000 வீடுகளை அமைப்பதற்கான கொந்தராத்து வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் மிக அழகாகத் தயார் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் நகர்ப்புறங்களை நாடிச்செல்லும் மக்களின் எண்ணிக்கை கட்டுப்படுத்தப்படும். எமது சுதந்திர வர்த்தக வலயம் காரணமாக பெருந்தொகையானோருக்கு அங்கு செல்ல வேண்டுமென்பது உங்களுக்குத் தெரியும். சீதுவையில் அமைக்கப்பட்டுள்ள இவ்வீடுகள் அவர்களுக்கு வெகு பிரயோசனப்படும். அப்பகுதியிலுள்ள பெரும்பாலோருக்குத் தொழில் கிடைக்கும். 2,000 வீடுகளை இன்று அல்லது நாளை கட்ட ஆரம்பித்தால் வேலைவாய்ப்புப் போன்றே பெரும்பாலோருக்கு வீட்டு வசதியும் கிட்டும். இதே மாதிரி மத்தேகொட, கொட்டாவ, கோட்டே, போன்ற நகர அயற்புறங்களில் வீடுகளைக் கட்டுகையில் வீடுகட்டும் செயற்பாட்டை மாத்திரம் இது உள்ளடக்காது.

மக்கள் தங்களை ஈடுபடுத்தும் வகையில் சில வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அரசாங்கத்தினால் ஏற்படுத்தப்பட்ட திட்டங்களைத் தவிர தனியார் துறையினரும், வேலைத் திட்டங்களில் ஈடுபட்டுள்ளதாலேயே இந்நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்தக் காலகட்டத்தில் எதிர்பாராதளவு நிர்மாண வேலைகளைக் காணக்கூடியதாகவுள்ளது. இது எமது எதிர்க்கட்சியினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு உண்மையாகும். எமது முன்னைய நாள் உறுப்பினர்கள் பலரும் இத்திட்டங்களினால் பயன்பெறுகின்றனர். "நாம் தோல்வியடைந்ததே நல்லது. நான் இந்த நிறுவனத்தில் கடமையாற்றுகிறேன். எனக்கு இப்போது, பல கட்டிடங்கள் உண்டு. நான் பல "டிரக்டர்"களின் உரிமையாளன். நாங்கள் மீண்டும் தெரிவு செய்யப்பட்டிருப்பின் நாங்கள் ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாகியிருப்போம். இருந்தும் நாங்கள் உங்களுடைய ஐக்கிய தேசியக் கட்சிக்கு விரோதமானவர்களே. ஆனால் இருந்தும் மனதிற்குள் உங்கள் கட்சியின் வெற்றிற்கு வாழ்த்துகிறோம்" என்று முன்னாள் உறுப்பினர்கள் கூறுகிறார்கள். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல அமைச்சர்களும் உதவியமைச்சர்களும் கூட சில கம்பனிகளில் தொழில் வசதி பெற்றுக் கைநிறையச் சம்பளம் பெறுகிறார்கள். சிலர் கொந்தராத்து அடிப்படையில் வேலைசெய்கிறார்கள். அவர்களும் எங்களது வெற்றிக்காக வாழ்த்துகிறார்கள். எங்கள் கட்சியை அழிக்கும் நோக்கத்துடன் செயல்படுபவர்களில் ஊவாவைச் சேர்ந்த வில்பிரட் இரத்நாயக்காவும் ஒருவர். அவர் வெல்லவாய தேர்தல் தொகுதியில் போட்டியிட்டார். இன்று அவரிடம் எத்தனை "புல்டோசர்கள்" உண்டு? அவர் எங்களது அபிவிருத்தித் திட்டங்களால் முழுப் பயனும் பெற்றுக்கொண்டிருக்கிறார் மகாவலித்திட்டம். அவர் எம்மை எதிர்ப்பவர் என்பதால் நாம் அவருடைய புல்டோசர்களைப் பயன்படுத்தாமல் இருக்கிறோமா? இல்லை.

கனம் சபாநாயகர் அவர்களே! நாடெங்கும் உள்ள பலதரப்பட்ட மக்ளும் இப்படியான திட்டங்களின்மூலம் தமது வாழ்க்கையை நடத்துகின்றனர். நான் ஒரு கேள்வி கேட்கவிரும்புகிறேன். எங்களுடைய வேலைத்திட்டங்கள் இவ்வாறு அமையப்பெருவிட்டால் எண்ணெய் விலை உயர்வினுல் ஏற்பட்டுள்ள உலகப் பிரச்சினையை எங்களால் சமாளிக்கக் கூடியதாகவிருக்குமா? நிலையான சம்பளம் பெறும் மக்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகிருர்கள், என்பதை நான் அறிவேன் ஆயினும் அவர்களுக்கு நாம் எத்தனைமுறை சம்பள உயர்வு வழங்கியிருக்கிறோம். வருமானவரி விதிப்பில்லாத வகையில் நாம் அவர்களுக்கு எத்தனை முறை சம்பளவுயர்வு வழங்கியுள்ளோம். அவர்களுக்கு 140/- சம்பளப்படி வழங்கினேம். இது அடிப்படைச் சம்பளத்துடன் சேர்க்கப்பட்டதாகும்.

அதைத் தொடர்ந்து 10% சம்பளவுயர்வு, 55 ரூபா சம்பளப்படி வழங்கினேம். ஆனுல் இது போதுமானதென்று நாம் கூறவில்லை. சம்பள வுயர்வு சம்பந்தமாக கவனம் செலுத்தப்படுவதாகவும், அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் மதிப்புக்குரிய ஜனுதிபதி, நிதியமைச்சர், மற்றும் அமைச்சர்கள் பல சந்தர்ப்பங்களில் கூறிவந்திருக்கிருர்கள். அதனுல் இந்த விடயத்தைத எவ்விதம் நடைமுறைப்படுத்துவது என்பது பற்றி நாம் முயற்சிசெய்து வருகிறேம். இது விடயத்தில் பல முறைகளைக் கையாளலாம். உதாரணமாக சம்பள உயர்வு வழங்கப்படுவதிற்கான தொகையை சேமிப்புக் கணக்கிலிட்டு தொழிலாளர் அதன் வட்டியைப் பெறலாம். இவ்வாறும் மற்றும் பல முறைகளையும் நடைமுறைப் படுத்த முடியும். இதனுல் சம்பளவுயர்வுப் பிரச்சினையானது உடனடியாக அவசரமாக செய்யக்கூடிய ஒரு விடயம் அல்ல என்பதை நாம் உணர வேண்டும். ஆனுல் கனம் சபாநாயகர் அவர்களே, என்ன நடந்தது? இது சம்பந்தமாக நாங்கள் நடவடிக்கை எடுக்க முற்பட்ட சமயத்தில், இவர்கள் முற்றிலும் மாறுபட்ட ஒரு சூழ்நிலையை ஏற்படுத்திவிட்டனர்.

இதுவே நல்ல தருணமென மே மாதம் 1 ம் திகதி ஸ்ரீ. ல. சு. கட்சி எண்ணியது. ஐக்கிய தேசியக் கட்சி என்றுமே வெற்றி பெருத தேர்தல் தொகுதி ஆனமடுவ தேர்தல் தொகுதியே. முன்பு என்னுல் குறிப்பிடப் பட்டதுபோல பணவீக்கமானது உலகெங்கணும் பரந்துள்ளது. உண்மையாகவே பணவீக்கமானது உலகெங்கணும் பரந்துள்ளது. ஆனுல் இலங்கையில் பணவீக்கத்தினைப் பரப்பியதற்கு ஐ. தே. கட்சி அரசுதான் பொறுப்பென்பதை நாம் நிரூபிப்போமென அவர்கள் தீர்மானித்தார்கள். மேற்கூறிய இரு காரணங்களின் சக்தியைக்கொண்டு ஸ்ரீ. ல. சு. கட்சியினர் தங்களின் போராட்டம் 7 ஆம் திகதிக்குப் பின்னரே தொடங்கு

மென்று கம்பல் பூங்காவில் அறிவித்தார்கள். இம்முயற்சி அரசாங்க கத்துக்கு முறைப்பாடு செய்தபின் தொழிற்சங்க நிறுவனங் கள் தங்களுக்குள் கலந்தாலோசித்துக் கருத்தில் கொண்டதல்ல. மே மாதம் 1 ஆம் திகதியில் ஸ்ரீ. ல. சு. 'க. தாம் ஆனமடுவ ஆசனத்தைக் கைப்பற்றுவோம் என நம்பியிருந்தனர். வெற்றியின்பின் போராட்டத் தைத் தொடங்க எண்ணியிருந்தனர். இவ்வரசாங்கத்தைத் தோற்கடிக்க எண்ணியிருந்தனர். அழிக்க எண்ணியிருந்தனர், கவிழ்க்க எண்ணியிருந் தனர். இப்பின்னணியை நான் கவனத்திற்கொள்ளவேண்டியிருக்கிறது. இந்நிலைமை, குறிப்பிட்ட வேதனம் பெறுவோருக்காகவோ அல்லது அவர்களின் நன்மையைக் கருதியோ உண்டாக்கப்பட்டதல்ல. முற்கூட் டியே மே 1 ஆம் திகதியே இவ்வரசுக்கெதிராக ஒரு அரசியல் தாக்குதலை இவர்கள் ஆயத்தப்படுத்தியிருந்தனர். ஆனமடுவவில் வெற்றியெடுத்த பின்தான் இத்தாக்குதலை நடத்த வேண்டுமெனத் திட்டமிட்டிருந்தனர். ஆனால் அவர்களின் எண்ணங்கள் தோல்வியடைந்தன. ஆனால் ஆனமடுவ வில் தோல்வியடைந்ததை நாம் நினைவுகூரவேண்டும். அத்தோல்வியின் எரிந்த சாம்பருக்குக் மீண்டும் தீ மூட்ட வேண்டும் எனும் எண்ணத்து டன் அவர்கள் தோல்வியின் தாக்கத்தினை அனுபவித்துக்கொண்டிருந் தார்கள். அப்படித் தாமதித்துக் கொண்டு எதிர்ப்புத்தினத்தை எதிர் நோக்கிக்கொண்டிருந்தார்கள். இரத்மலானைப் புகையிரத வேலைத்தலத் தில் அன்று ஏற்பட்ட 12 தொழிலாளர்களின் பிரச்சினையுடன் வேறு வகை யான விஷயங்களை இதனுடன் சேர்த்தார்கள் என்பதை நான் காட்டியுள் ளேன்.

உப சபாநாயகர் அவர்களே! நான் சொல்வது என்னவெனில் இது ஓர் தொழிற்சங்கச் செயலல்ல. ஆனால் இந்நாட்டின் முற்போக்கு நடவ டிக்கைகளைத் தடுத்து நிறுத்தும் நோக்கத்துடன் தோல்வியுற்ற அதிகார வெறிகொண்ட அரசியல் பிரிவுகளால் மேற்கொள்ளப்பட்ட ஒரு அளப் பெரிய சதியும் குற்றமும் ஆகும். இந்நிலைமையில் இந்நாட் டில் உள்ள தொழிலாளர் வர்க்கத்தினருக்கு நான் நன்றிகூற விரும்பு கிறேன்.

பல்வேறு நிறுவனங்களில் சுமார் பத்து இலட்சம் தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். பத்து இலட்சம் மொத்த வேலைப்பலத்தில் ஆக 40,000தொழிலாளரே பிழையான வழியில் இட்டுச் செல்லப்பட்டுள்ளனர். இத்தகைய விவகாரங்களின் இந்த நிலைமையினால் நான் உண்மையாகவே மனவருத்தம் அடைகிறேன்.

பத்து இலட்சம் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இச் சூழ்ச்சிப் பொறியினுள் ஆக 40,000 பேர் மட்டுமே அகப்பட்டுள்ளனர். எம் மக்களின் நம்பிக்கையினை வெல்லத் தவறிய குறிப்பிட்ட சில அரசியல் வாதிகளினாலேயே இப்பொறியானது உருவாக்கப்பட்டது.

இது இந்நாட்டின் மக்களுக்கு எதிராக நடாத்தப்பட்ட ஒரு சதி. ஏன் நான் அப்படிச் சொல்ல வேண்டும்? மக்கள் பணவீக்கத்தினை எதிர் நோக்குவதற்கு வாழ்க்கையின் எல்லாப் படிகளிலும் சராசரி வருமானத்தைப் பெறக்கூடியதான ஒரு பொருளாதார மறுமலர்ச்சியினை இந்நாட்டில் உருவாக்குவதற்கு நாம் எவ்வாறு உழைக்கிறோம் என்பதனை நாம் உங்களுக்குக் குறிப்பிட்டுக் காட்டவேண்டும். இந்நேரத்தில் உருவாக்கப்பட்டுள்ள இச் சதியானது இந்நாட்டின் மக்களுக்கு எதிரானதொரு ஒரு வித புரட்சி நடவடிக்கையும் அத்துடன் மக்களுக்கு எதிரான சட்டத்தை மீறிய ஒரு செயலுமாகும். இந்நாட்டு மக்களின் வாக்குகளினால் பதவிக்கு வந்த அரசாங்கம் இந்த மக்களை அத்தகையதொரு இக்கட்டான நிலையில் துன்பப்பட ஒருபோதுமே விடமாட்டாது என்பதனை அழுத்திக்கூற விரும்புகிறேன்.

மக்களின் மேல் எமது முழு நம்பிக்கையையும் வைத்துள்ளோம். இந்நாட்டினது மக்களினது வாக்கினாலேயே 1977 யூலை மாதம் 21 ஆந் திகதி அதிகாரத்திற்கு வந்தோம். அதன்பின்பு மக்கள் உள்ளூராட்சித் தேர்தல்கள் மூலம் தமது நம்பிக்கையை நிரூபித்தனர். ஒவ்வொரு உப தேர்தல்களின் மூலமும் இது நிரூபிக்கப்பட்டது. இக்கணத்தில் நாம் அமைதியாக இருக்க முடியும். ஆனால் நாம் அமைதியாக இருந்தால் அது மக்களின் நம்பிக்கைக்குக் கேடு விளைவிப்பதாக அமையும். 40,000 பேர் மட்டுமே இப்பொறியினுள் அகப்பட்டுள்ளனர். விகிதாசாரப்படி நீங்கள் ஒப்பு நோக்கிப் பார்த்தால் இந்நாட்டின் மக்களினது விருப்பங்களின் ஒரே மாதிரியான பிரதிபலிப்பினை நீங்கள் காணலாம். இப்பொறியினுள் 40,000 பேர் வீழ்ந்துள்ளது பற்றி நாம் ஆச்சரியப்படவில்லை.

அவர்கள் தான் ஐ. தே. கட்சி அரச அதிகாரத்திற்கு வருவதற்கெதிராகத் தம் வாக்குகளை அளித்தோராவர். முன்னைய அரசாங்கத்தினால் பல்வேறு திணைக்களங்களிலும் கூட்டுத்தாபனங்களிலும் பதவியில் அமர்த்தப்பட்டவர்களைப் பொதுத் தேர்தலின்பின் நாம் தூக்கி எறிந்திருந்தோமானால் இன்று இந்நிலைமை வந்திராது. ஆனால் நாம் அதனைச் செய்யவில்லை. எம்மையும் எமது மதிப்பிற்குரிய பாராளுமன்ற உறுப்பினர்களையும் அவ்வாறு செய்யாததற்காகப் பலர் குறைகூறினர்.

எமது வேலைத்திட்டங்களில், எமது கட்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்தவர்களுக்கும் வாய்ப்பு அளித்ததையிட்டு எங்களை பதவிக்குக் கொண்டுவரும் பொருட்டு வாக்களித்த நாட்டு மக்கள் அனைவரும் எம்மை குற்றம் கூறினார்கள். அப்போது நாம் என்ன சொன்னோம்? எமது கட்சிக்கு நீங்கள் வாக்களித்து எமக்கு ஆட்சிப் பொறுப்பை ஏற்படுத்தித் தந்தீர்கள். ஆயினும் பதவிக்கு வந்தபின் அரசியல் நோக்கங்களுக்காகப் பழி வாங்குவது நல்லதல்ல என்று சொன்னோம். புதுத் துறைகள் ஆரம்பிக்கப்பட்டு புது தொழில்வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்படும் என்று சொன்னோம். எங்களின் மனக்குமுறல் அதிகமாக இருந்தது. ஒவ்வொரு மாநாட்டிலும் நிர்வாகக் குழுக்கூட்டங்களிலும் எமக்கு பல வழிகளிலும் பல தடைகள் இருந்து வந்தன. மதிப்பிற்குரிய பாராளுமன்ற உறுப்பினர்களே இவ்விஷயங்களுக்குச் சாட்சி பகருவார்கள். சில நிறுவனங்கள் வெளிப்படையாகவே நாசவேலைகளில் ஈடுபட்டன. உள்ளூராட்சிச்சபைத் தேர்தல்களைத் தொடர்ந்து 39 பேர் உடனடியாக இடைநிறுத்தம் செய்யப்பட்டனர் என உள்ளூராட்சிச் சபைத் தலைவர் ஒருவர் என்னிடம் கூறினார். அரசியல் நோக்கங்களுக்கு அரச சேவையைப்பயன்படுத்தக்கூடாது என்று நாம் அப்போது அவர்களுக்கு எச்சரிக்கை செய்தோம். ஆனால் நடந்தது என்ன? அப்படியே அந்த 34 பேரும் வேலைநிறுத்தம் செய்தனர். அவர்களை மூன்று வருடங்களுக்கு முன்னர் வேலையிலிருந்து நீக்கி இருக்க வேண்டும். ஆனால் நாம் அப்படிச் செய்யவில்லை. எங்கள் நோக்கம் அப்படியான கொள்கைகளுக்குட்பட்டதல்ல. எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் பலருக்கு நாம் இவ்வாறு உதவி செய்துள்ளோம், என்பதை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அறிவார்கள். மாறுபட்ட அரசியல் கருத்துக்களைக் கொண்டிருப்பதில் தவறு ஒன்றுமில்லை. ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட அரசியல் உரிமை, சுதந்திரம் உண்டு. 33 இலட்சம் மக்கள் எமக்கு ஆதரவாகவும் 20 இலட்சம் மக்கள் அவர்களுக்கும் வாக்களித்தனர். பல்தரப்பட்ட கருத்துக்கள் கொண்ட மக்களிடையில் ஒவ்வொருவரும் வாழவேண்டும். எங்களுக்கு எதிராக வாக்களித்த பலர் இன்று எமது கூடாரத்துக்குள்ளேயே இருக்கிறார்கள். அதுபோல் எமது ஆதரவாளர்கள் சிலரும் மாறுபட்டு இருக்கலாம். குறுகிய மனப்பான்மையுடன் ஆட்சி நடாத்த முடியாது. அதனால்தான் நாம் இவ்வாறான செய்கைகளுக்குத் தடை விதிக்கவில்லை. இப்போது நடந்துள்ளது என்ன? அவர்கள் வேலை செய்ய மறுத்தார்கள். நாம் அவர்களைத் துரத்தவில்லை. நாம் அவர்களை வெளியேற்றம் செய்யவில்லை. வேலையிலிருந்து விலகுமாறு நாம் அவர்களைக் கேட்கவில்லை. அவர்களுடைய பகுத்தறிவிற்கு மாறான போராட்டத்தினால் ஒன்றுமறியாத ஒரு உயிர் பலியாயிற்று. இவ்வாறான கொள்கைகள் யாவற்றுடனும் அவர்

கள் வேலை செய்ய அனுமதிக்கப்பட்டனர். ரயில்வே வேலைத்தலத்தைச் சேர்ந்த 12 பேர் அவர்களுடன் போராட்டத்தில் இறங்காதவர்களைப் பய முறுத்தியதால், அவர்கள் மேல் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

வருமான அதிகரிப்பு

தவருன பாதையில் செல்பவர்களைத் தொடர்ந்தும் அவ்வாறு நடக்க அனுமதிக்க முடியாது. குழப்பங்களையும் பயமுறுத்தல்களையும் கண்டு கண்ணை மூடிக்கொண்டிருக்க முடியாது. போராட்டத்தில் பங்குபற்ருத வர்களைப் பயமுறுத்த வேண்டுமா? இப்போது 10 இலட்சம் தொழிலாளர் கள் போராட்டத்தில் குதித்துள்ளதாக கூறுகிருர்கள். ஆனுல் உண்மையில் 40,000 தொழிலாளர்களே வேலை நிறுத்தம் செய்கிருர்கள். வேலை நிறுத்தத் தில் பங்கு கொள்ளாதவர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றி யைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவர்களது கடமை உணர்ச்சியானது எந்த ஒரு தனிப்பட்ட அரசியல்வாதிக்கு மட்டுமல்ல, முழு நாட்டுக்குமே நன்மை பயப்பதாகும் நாங்கள் முன்வைத்த காலைப் பின் வைப்பதில்லை. பிரச்சினைகள் உலகெங்கும் உள்ள ஒரு விடயம். எங்களைவிட பலமிக்க நாடுகள் எவ்விதம் இந்நிலைமைகளை சமாளிக்கின்றன? இங்கிலாந்தின் கொள்கை என்ன? இங்கிலாந்தின் அரசாங்கத்துறையில் வேலை வாய்ப்பு கள் வெகுவாக குறைக்கப்பட்டுள்ளன. மற்ற நாடுகளும் தத்தமது கொள் கைகளை வகுத்துள்ளன. ஆனுல் நாங்கள் என்ன செய்தோம்? வருமானத் தைப் பெருக்குவதன் மூலம் பிரச்சினைகளைத் தீர்த்தோம். எங்களுடைய வருவாயில் குறிப்பிட்டளவு அதிகரிப்புண்டா? ஒரு சாதாரண கூலியாள் தான் செய்யும் வேலைகளுக்குத் தின ஊதியமாக 10 முதல் 15 ரூபாவரை பெறுகிருன். ஒரு பயிற்சிபெற்ற தொழிலாளி அதாவது மேசன், தச்சன் போன்ருேர் தின ஊதியமாக 40 ரூபாவுக்கு மேல் பெறுகின்ருர்கள். 1977 இல் ஒரு இருத்தல் பாண் 1 ரூபாவாகவும் இப்போது 2 ரூபாவாகவும் இருப்பது காலத்தின் விலையேற்றம். அப்போது ஒரு கூலியாள் தனது அன்ருட வருமானத்தில் 3 இருத்தல் பாண் மட்டுமே வாங்க முடிந்தது. ஆனுல் இப்போது 6 இருத்தல் பாண் வாங்கக் கூடியவனுக இருக்கிருன். அன்று தினமொன்றுக்கு 5 ரூபா ஊதியம் பெற்ற ஒரு தச்சன், அன்றைய நிலையில் 5 இருத்தல் பாண் மட்டுமே வாங்க முடிந்தது. ஆனுல் இன்று 40 ரூபா தின வருமானத்தைக் கொண்டு இருத்தல் 2 ரூபா வீதம்20 இருத் தல் பாண் வாங்கக் கூடியவனுக இருக்கிருன். நாம் குறிக்கோளுடைய மதிப்பீடொன்றை கவனிப்போம். இன்று அரசாங்கத் துறையிலும் கூட் டுத்தாபனங்களிலும் 5 இலட்சத்துக்கு மேற்பட்டோர் தொழில் வாய்ப்புப் பெற்றுள்ளனர். மற்றும் பலர் சுய தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். நிலை யான வருமானம் பெறுவோருக்கு நிவாரணம் வழங்க விருக்கிறேம் என

முன்னரே கூறியுள்ளேன். தொழிலில்லாதவர்களின் நிலை பற்றித் தயவு செய்து சிந்தித்துப் பாருங்கள். அவர்களுக்கு அனுதாபம் தெரிவிப் போர் யார்? அவர்களது பிரச்சினைகளையும் நாம் ஆராய வேண்டியுள்ளது. எவ்வித வருமானமும் அற்ற அவர்களுக்கும், வாழ்வதற்குச் சில வழிவகை கள் அமைத்துக் கொடுத்தல் வேண்டும். தொழில் வாய்ப்புகளை மேலும் பெறுவதும், வருவாய்களை மேலும் அதிகரிப்பதும் இன்றைய தலைமுறை யினரின் அதிகரிக்கும் தேவைகளாக உள்ளன. தொழில் இல்லாதிருந்த போது, வருமானம் குன்றியிருந்தபோது தினமும் ஒரு இடியப்பம் சாப் பிட்ட ஒருவன் தினமொன்றுக்கு 5 ரூபா பெறும் நிலையேற்பட்டதும் 3 இடியப்பம் சாப்பிட முற்படுகிறான். இது மனித இயல்பு. வருமானம் பெரு கப்பெருக உற்பத்தியும் அதிகரிக்க வேண்டும். வேடிக்கைக்காகவா இவ்வ ளவு தொகையான மக்கள் பஸ்களில் பிரயாணம் செய்கிறார்கள், ஏற் கெனவே இருந்த பஸ்களுடன் மேலும் பல பஸ்கள் சேர்க்கப்பட் டுள்ளன. ஆயினும் ஏன் இன்னும் பஸ்களில் சனநெரிசல்? மக்கள் தமது வேலைத்தலத்திற்குச் செல்ல பஸ் தேவை. மக்கள் பஸ் கட்டணம் செலுத் தக்கூடியவர்களாக இருந்தால் அவர்கள் நடந்து செல்வதை விரும்புவ தில்லை. இது மனித இயல்பு. வருமானமில்லாதபோது கோட்டையிலிருந்து பொரளைக்கு நடந்த ஒருவன் கையில் பணம் வந்ததும் பஸ்வண்டியில் தொங்கிக் கொள்ளவே விரும்புகிறான். வருமானம் பெருக வாடகைக்காரில் போக விரும்புகிறான். இது மனித இயல்பு. 1977 க்குப் பிறகு போக்கு வரத்து செய்வோரின் தொகை அதிகரிக்கவில்லை என்பது எதிர்க்கட்சியின ரின் அபிப்பிராயமா? அப்படியானால் பாதைகளில் வெறுமனே ஓடும் பஸ் களை நாம் காண வேண்டும். நாங்கள் மேலும் பஸ்களை சேவையில் ஈடு படுத்தியுள்ளோம். வாடகைக் காரின் தொகையும் அதிகரித்துள்ளது. "ஆட்டோ ரிக்ஷோ" க்களும் சேவையிலீடுபடுத்தப்பட்டுள்ளன. ஆனால் இவை யாவும் பொதுச் சேவைகளை பூர்த்தி செய்ய முடியாத நிலையில் உள் ளன. இந்த நிலை எதைக் காட்டுகின்றது? கோட்டை ரயில் நிலையத்தின் முன் எத்தனை தனியார் வாகனங்கள் சேவையிலீடுபடுத்தப்பட்டுள்ளன. பண வசதியுள்ளவர்கள், பஸ் கட்டணங்களை விட சற்று அதிகமாக அற விடப்படும் இந்த வாகனங்களில் செல்லத் தாமதிப்பதில்லை. அன்று தனது தேவைகளுக்கு நடந்துசென்ற ஒருவன் இன்று தனியார் வாகனத் தில் செல்லலாம். வருமான அதிகரிப்பு, தேவைகளையும் அதிகரிக்கச் செய் கின்றன. இதனால் உற்பத்திப் பெருக்கம் கட்டாயமாகின்றது. இன்று ஒரு பாராளுமன்ற உறுப்பினர் மாதச் சம்பளமாக 1000/- ரூபா பெறுகிறார். 1931 ஆம் ஆண்டு ஒரு சட்டசபை உறுப்பினருக்கு 400/- ரூபா வழங்க வேண்டும் என்று சேர். பாரன் ஜயத்திலக்க தீர்மானம் கொண்டுவந்த போது அப்போது வியாங்கொடை சட்டசபை உறுப்பினராக இருந்த

திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க அதை எதிர்த்ததாக "ஹன்சாட்" குறிப்பிடுகிறது. இந்த கட்டடத்திலேயே அன்று சட்ட சபைக் கூட்டங்கள் நடைபெற்றன. இங்கு அழகான தரை விரிப்புக்கள் விரிக்கப்பட்டிருந்தன. கடற் காற்றும் அமோகமாக வீசிற்று. நாட்டில் கஷ்டப்படும் மக்கள் என்றாவது ஒருநாள் இங்கு படையெடுத்து இம் முழுக் கட்டடத்தையும் தரைமட்டமாக்குவார்கள் என்றும் அப்போது சட்டசபை உறுப்பினரின் தலைவிதி எப்படியிருக்கும் என்றும் காலஞ் சென்ற திரு. பண்டாரநாயக்க அப்போது எடுத்துரைத்தார். அப்போது சேர் பாரன் ஜயதிலக்க, மக்கள் படை வியாங்கொடையைத் தாண்டின தும் சற்று ஆறுதல் அடையும். காரணம் அங்கு அழகான ஒரு மாளிகை உள்ளது, இவ்விடயத்தால் நாட்டில் ஒருவர் இருவர் மட்டுமே இப்படி அழகான மாளிகைகளில் வாழ்கிறார்கள், என்று அறிவார்கள். அது மட்டு மல்ல கூடுகளில் அடைக்கப்பட்டுள்ள மிருகங்களுக்கு போசாக்குள்ள உணவு வழங்கப்படுவதையும் காணுவார்கள். இதனால் சட்டசபை கட்டடத் தைத் தாக்குமுன்னரே இந்த மாளிகையைச் சேதப்படுத்த எண்ணுவார் கள். இந்த இடைப்பட்ட வேளையில் எங்களுக்குத் தேவையான பாது காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என வியாங்கொடையின் இளம் சிங்கத்துக்குப் பதிலளித்தார்.

நான் சிறு குழந்தையாக இருக்கும்போது வியாங்கொடைக்குப்போகும் வழியில் ஹொரகொல்ல வளவை என் தகப்பனார் எனக்குக் காட்டினார். நாங்கள் அங்கு அதிக நேரமிருந்து சிங்கங்கள், சிறுத்தைகளாகியவற் றைக் கண்டு களித்தோம். நாங்கள் அங்கு மிருகங்கள் பார்க்கவே சென் றோம் என்பதை மதிப்பிற்குரிய கம்பஹா பாராளுமன்ற உறுப்பினர் அறி வார்.

உப சபாநாயகர் அவர்களே, வியாங்கொடையின் அன்றைய இளம் சட்டசபை உறுப்பினர் வசதி குறைந்த மக்களின் நலன்கருதி உதட்டள வில் கூறியதை இந்த அரசாங்கம் செயலளவில் செய்துகொண்டு வரு கிறது. காணிச் சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் பண்டாரநாயக்க குடும்பத் தினர் எத்தனை ஏக்கர் நிலத்தை ஒப்படைக்க வேண்டியிருந்ததென்பதை என்னால் கூறமுடியாது. அது சனாதிபதி ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப் பட்டுள்ள அரசியல் பிரச்சனையாகும். எது எப்படியிருந்தாலும் முன்பு புலி கள் கூடுகளில் வைக்கப்பட்டிருந்த இடத்தில், காணிகள் ஒப்படைக்கப் பட்டபின்னர், அதன் ஒரு பகுதியில் 20 எளிய குடும்பங்கள் குடியேற்றப் பட்டன. இந்த அரசாங்கம் ஒரு மிருகக்காட்சிச்சாலையல்ல. நாங்கள் சோசலிசத்தைச் செயல்படுத்தி வருகிறோம். அன்று இது வாய்ச்சொல் அளவிலே இருந்தது. அப்போது 2 ஆயிரம் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு

வருவதாகக் கூறினேன். இவ்விதம் வீடுகளை நிர்மாணிப்பதற்கு அரச வம்சம் ஒன்று குதித்தெழுந்தது. என்றாவது ஒருநாள் இந்த விடயத்தை முன்னுக்குக் கொண்டு வருவேன். பொய் "பெட்டிசன்கள்" அனுப்பப்பட்டன. அதில் கைச்சாத்திட்ட ஒவ்வொருவருக்கும் நான் பதில் அனுப்பியபோது, தாங்கள் ஒருவரும் அப்படியான ஒரு கடிதத்தில் கைச்சாத்திடவில்லை எனத் தெரிவித்து எழுதியிருந்தார்கள்.

### வறிய மக்கள்

உப சபாநாயகர் அவர்களே, அன்றிலிருந்து இன்றுவரை நாட்டில் இடம் பெற்ற நிகழ்ச்சிகளைச் சற்று கவனிக்கும்படி நான் உங்களை வேண்டுகின்றேன். சட்டசபை உருவான நாளிலிருந்து பல சட்ட திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. அன்று சட்டசபை இருந்தது. பின்னர் தேசிய அரச பேரவையும் இன்று பாராளுமன்றமும் உள்ளன. நாட்டின் வறுமையை ஒழிக்கும் பொருட்டு, கடந்த 3 ஆண்டுகளில் இந்த அரசாங்கம் மேற்கொண்ட அளவு அபிவிருத்தி வேலைகளை இதுவரை எந்த அரசும் மேற்கொள்ளவில்லை என்பதை வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளும், அபிவிருத்தித் திட்டங்களும் காட்டுகின்றன. ஒவ்வொரு அபிவிருத்தித் திட்டத்திற்கும் பெருந்தொகை பணம் செலவழிக்கப்பட்டுள்ளது. ஆனால் நிரபராதிகளான மக்களை வேலை நிறுத்தம் செய்யத் தூண்டியுள்ள தலைவர்கள் கூறியுள்ளதென்ன? இந்த அரசாங்கம் அபிவிருத்தி வேலைகளுக்கு முதலிட்டுள்ளது. அதை நிறுத்தும்படி கேட்போம். இது தான் அவர்கள் சொன்னது. அவர்கள் சொல்வது என்ன? அபிவிருத்தி வேலைகளை நிறுத்திவிட்டு அதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தைப் பங்கீடு செய்ய வேண்டும். அவர்கள் கூறுவது இதுதானா? இது இலகுவான ஒரு செயல். நாளை கூட செய்து முடிக்கலாம். இதுபற்றி ஆராய்ந்தோம். இரத்மலானையில் பெரியதொரு கூட்டம் நடத்தினோம். அத்தனகலையிலும் தொடர்ந்து அப்படி ஒரு கூட்டம் நடத்தினோம். மருதானையிலும் ஒரு கூட்டம் நடந்தது. எனது இறுதித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கூட பங்குபற்றாத அளவு மக்கள், மருதானைக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். இங்கு வந்திருந்தவர்கள் பணக்காரர்கள் அல்லர். அவர்களிடமே இந்தக் கேள்வியைக் கேட்டோம். அவர்கள் சொல்வதென்ன, இந்தப் பணத்தை 1 கோடி 40 இலட்சம் மேலுறைகளில் போட்டு. பலம்வாய்ந்த 1 கோடி 40 இலட்சம் மக்களுக்குப் பகிர்ந்து கொடுக்கும்படியா எம்மைக் கேட்கிறார்கள்? இந்தப் பணத்தை நாம் காலையிலேயே மக்கள் மத்தியில் சரிசமமாகப் பகிர்ந்து கொடுக்கலாம். ஆனால் ஒரு விடயம். இந்த 1 கோடி 40 இலட்சம் இன்று மாலை முதல் நாளை காலைக்கிடையில் மாறிவிடக் கூடாது. இன்றுள்ள 1 கோடி 40 இலட்சம் மக்கள் தொகை நாளைக் காலை

அதிகரித்தால், பணத்தை நாம் மீண்டும் அதற்கேற்ப பங்கிட நேரிடும். இதையா எம்மைச் செய்யும்படி சொல்கிறார்கள். ஆனால் நாங்கள் அதைச் செய்ய மாட்டோம். நாட்டில் அபிவிருத்தியிருக்க வேண்டும். இவ்விதம் சமீப காலமாக மட்டுமல்ல கூறிவருகிறோம். எமது கட்சியின் தலைவர் காலஞ்சென்ற திரு. டி. எஸ். சேனநாயக்க காலம் முதலே கூறிவருகிறோம். இதுவே எமது கட்சியின் குறிக்கோள். இந்த நாட்டின் ஒவ்வொரு பிரசையும் தனது திறமைக்கேற்ப தமது வாழ்க்கையை நடத்திச் செல்ல வழியமைப்பதே எமது திட்டமாகும். இந்த நாட்டின் "மாக்ஸிஸ்டுக" ளுக்கு என்ன நடந்தது? அவர்கள் இந்த இயக்கத்தை ஒரு குழுக்கள் மத்தியிலேயே வலுப்பெறச் செய்தனர். சாதாரண மக்களை அவர்கள் கவனிக்கவில்லை. அதனால் அவர்கள் கை கழுவப்பட்டனர். பொறுப்பு வாய்ந்த ஒரு அரசாங்கம் அவர்களைக் கவனிப்பதா? அல்லது சாதாரண மக்களின் அன்றாட தேவைகளில் கவனம் செலுத்துவதா? தொழிற்சங்கவாதிகள் பொதுமக்களின் ஒரு பகுதியல்லவா? அவர்கள் தம் தொழில் மூலம் பெறும் இலாபத்தை அனுபவிப்பவர்கள், அவர்களது குழந்தைகளே. அவர்களது குடும்பங்களே அவர்களின் லாப நட்டத்தை அனுபவிக்கின்றனர். சம்பள உயர்வு வேண்டுமென்று துறைமுகத்தில் வந்திருக்கும் பொருட்களை இறக்க மறுத்துச் செல்லும் ஒருவரின் காதில் விழுவதென்ன? இன்று குழந்தைக்கு பாலுணவில்லை என்ற மனைவியின் குறைபாடாகும். ஏன் என்று அவள் கேட்டால், துறைமுகத்தில் சாமான் இறக்கப்படவில்லை என்று அவன் கூறுகிறான். இச்சமயத்தில் தகப்பன் என்ன எண்ணுகிறான்? வேலைநிறுத்தத்துக்குப் பிறகு வாழ்க்கைச் செலவு உயருமா? சம்பளம் அதிகரிக்கப்படுமா? என்பதாகும்.

தண்ணீர் விநியோகம் நிறுத்தப்பட்டால் நாங்கள் எதனைக் குடிப்பது? மின்சார விநியோகம் தடைப்பட்டால் நாங்கள் எவ்வாறு வாழ்வது? போக்குவரத்துச் சேவைகள் சீர்குலைக்கப்பட்டு அலுவலகங்கள் செயலிழந்தால் எமது சமூகம் எப்படி வாழ்வது? இவர்களின் செய்கைகளினால் எமது அரசாங்கத்தின் 140 பாராளுமன்ற அங்கத்தினர்கள் மட்டுமா பாதிக்கப்படுகின்றனர்? இந்த பாராளுமன்றத்தின் 168 அங்கத்தினர்கள் மட்டுமா பாதிக்கப்படுகின்றனர்? வேலைநிறுத்தத்தால் சம்பளம் அதிகரிக்கப்பட்டு, வாழ்க்கைச் செலவு குறைந்து பிரச்சினைகள் தீர்வடைந்தால் நல்லதுதான். ஆனால் அவ்விதம் நடைபெறப் போவதில்லை. அதனால்தான் 10 இலட்சம் தொழிலாளர்களில் 40 ஆயிரம் பேரை மட்டுமே உங்கள் வழிக்குக் கொண்டுவர முடிந்தது. மற்றவர்களை வேலைநிறுத்தத்தில் பங்கு பற்றுமாறு வற்புறுத்துகிறார்கள் என்று அறிகிறேன். ஆனால் நேற்று அல்லது அதற்கு முன்தினம்தான் "சிலோன் டுபேக்கோ கம்பனி" ஊழியர்

கள் தமது தொழிற்சங்க தலைவர்களை பொருட்படுத்தாது வேலைக்குத் திரும்பினர். அதைத் தொடர்ந்து "லீவர் பிரதர்ஸ்" ஊழியர்களும் வேலை நிறுத்தத்தில் பங்குபற்ற அழைக்கப்பட்டனர். ஆனால் அவர்களும் வேலைக் குத் திரும்பிவிட்டனர். எனவே அவர்கள் செய்வதுதான் என்ன?

உப சபாநாயகர் அவர்களே, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி பதவியில் இருந்திருப்பின் உலகச் சந்தையில் ஏற்பட்டிருக்கும் விலை உயர்வுகளை அவர்களால் தடுத்திருக்க முடியுமா? அத்தனகலை தொகுதியின் மதிப்பிற் குரிய பாராளுமன்ற உறுப்பினர் திருமதி ஸ்ரீமாவோ ஆர். டி. பண்டார நாயக்க ஈராக் விஜயத்தைத் தொடர்ந்து இந்தியா சென்று அங்கிருந்து திரும்பிக் கொண்டிருக்கிறார். அவர் திரும்பி விட்டாரா என்று எனக்குத் தெரியாது. அவர் திரும்பியிருந்தால் அவரை சந்தோசமாக வரவேற்கத் தயாராக இருக்கிறோம். புதுடில்லியில் அவரது உரைபற்றி "ராய்டர்" குறிப்பிட்டுள்ளது. அது சரியா பிழையா என்பது பற்றி நான் அறியேன். இந்தக் கூற்று பிழையென்றால், அத்தனகலை உறுப்பினர் அதை திருத்திக் கொள்ளலாம். அவர் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்தானத்தில் இருந்து சொல்வதை ஏற்றுக்கொள்ள நான் தயாராக இருக்கிறேன்.

பருகத் தண்ணீர் இல்லை, மின்சாரம் இல்லை, போக்குவரத்து வசதி இல்லை, உணவுப் பொருட்களை விநியோகிக்க வழியில்லை. இப்படியான ஒரு நிலைமை ஏற்பட்டால் நாம் நடவடிக்கை எடுக்காமல் அமைதியாக இருக் கும் படியா கேட்கப்படுகின்றோம். இல்லை, மக்களின் நலன் கருதி பாடு படவே முற்படுவோம். இதுவே எங்கள் கடமையும் பொறுப்புமாகும். பிரச்சினைகள் வரும்வரை நாங்கள் காத்திருப்பதில்லை. விடயங்கள் பார தூரமாகுமுன் அதற்கு பரிகாரம் மேற்கொண்டிருக்கிறோம். எல்லா நோய் களுக்கும் எங்களிடம் பரிகாரம் உண்டு.

"இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்தன இலங்கையில் வேலை நிறுத்தங்கள் இருக்காதென வெளிநாட்டு முதலீட்டாளர்களிடம் வாக் களித்துள்ளார். இதனை அவர் நிரூபிக்க வேண்டும்" மேற்கண்டவாறு புதுடில்லியில் நான்கு நாள் தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண் டுள்ள திருமதி பண்டாரநாயக்க பத்திரிகையாளர் மாநாடொன்றில் தெரி வித்துள்ளார்.

தொடர்ந்தும் அவர் "ஜூலை மாதம் 16 ஆம் திகதி ஜனாதிபதி அவசர காலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தினர். 18 ஆம் திகதி மேற்கொள்ளப் பட்ட வேலை நிறுத்தம் பெரும் தோல்வி கண்டுள்ளதென்று அரசாங்கம் அறிவித்தது. அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தியது தேவை யற்ற ஒரு விடயம்" என்று கூறினர். கடந்த வாரம் இலங்கையின் தலை நகரில் இராணுவ வீரர்கள் ரோந்து புரிந்ததைக் கேள்வியுற்ற திருமதி

பண்டாரநாயக்க "வீதிகளில் இராணுவ வீரர் ரோந்து புரிவது பாரதூர மான ஒரு விடயம். மக்களுக்கும் இராணுவத்திற்கும் இடையில் கருத்து வேறுபாடுகள் உள்ளன. பாரதூரமான விளைவுகளை இது ஏற்படுத்தலாம்.

"ஆம் பாரதூரமான விளைவுகளை இது ஏற்படுத்தலாம்; நாம் அதனைத் தவிர்க்கவே விரும்புகிறோம்."

"இலங்கை அரசாங்கம் பெரும் பொருளாதாரப் பிரச்சினையில் சிக்கி யுள்ளது. பணவீக்க நிலைமைகள் 40% முதல் 42% வரையியுள்ளது" என் றார். இதற்குப் பிறகு அவர் நல்லதொரு கருத்துத் தெரிவித்துள்ளார். தேர்தலுக்கு முன்னும் அவர் இத்தகைய கருத்துக்களைத் தெரிவித்துள் ளார்.

அரசாங்கம் 1983 வரை பதவியில் இருக்காது என்று அவர் சொன்னார். அதுவே அவர்களது ஆசை. கனவும் அதுவே. மே மாதம் 1 ஆம் திகதி சம்பல் பார்க்கில் இதுவே கூறப்பட்டது. "7 ஆம் திகதிக்குப் பிறகே நாங்கள் தேவையானதைச் செய்வோம்". 7 ஆம் திகதி மரணச் சடங் கொன்றில் கலந்து கொண்டேன். நான் திரும்பி வருகையில் வெற்றி பெற் றிருப்போம் என நினைத்தேன். சோடனைகள் போடப்பட்டிருந்தன. ஆனால் இது ஒரு தோல்வி என்று அறியப்பட்டது. கடைசியில் மரணவீட்டில் இருந்து வந்த ஒருவர் அலங்காரங்களுடன் வரவேற்கப்பட்டார். அப்போ அவர் இந்த வேலைநிறுத்தம் ஒரு முழுத்தோல்வியானது என்பதை ஏற்றுக் கொள்வார்.

இம்முக்கிய வேளையில் அரசாங்க உறுப்பினர்களால் எழுப்பப்பட்ட ஒரு கேள்வியினை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவரவிரும்புகிறேன். இலங்கையில் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன, என எமது அங்கத்தவர்கள் கேட்கிறார்கள். ஆனால் நாம் எடுக்கவேண்டிய எல்லா அவசிய நடவடிக்கைகளையும் எடுத்துள்ளோம். இச்சபையின் மூலமாக இந் நாட்டு மக்களுக்கு நாம் தெரிவிக்க விரும்புவது, நாம் இங்கிருக்கும் வரை அவர்கள் எதற்கும் அஞ்சத்தேவையில்லை, என்பதே. நாம் கலைந்துசெல் லும்வரை பொதுமக்கள் எத்தகைய வசதியீனங்களையோ அல்லது சேதங் களையோ அனுபவிக்க விடமாட்டோம். அவசர காலச் சட்டத்தைப் பிர கடனம் செய்த பின்னர் நாம் ஒளிந்துகொள்ள மாட்டோம். அவசரகாலச் சட்டம் அறிமுகம் செய்யப்பட்ட பின் ஒரு நாளாயினும் நாம் ஒளிந்திருந் தது கிடையாது, என கொத்மலே உறுப்பினருக்கு நான் கூறிவைக்க விரும் புகிறேன். வேலைநிறுத்தம் ஒன்று ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் அரசாங்கக் கட்சி பொதுமக்களிடம் சென்றதை இந்நாட்டின்வரலாற்றில் நீங்கள் எப்போதாவது கேட்டதுண்டா? நாம், உங்களுடைய கூட்டங்களைத் தடைசெய்தோம். உங்களுடைய வேலைநிறுத்தம் சட்டவிரோதமானபடி

யால் மக்களை வேலைநிறுத்தம் செய்யுமாறு தூண்ட முடியாதென நாம் இக் கூட்டங்களை ஏற்பாடு செய்தோருக்குத் தெரிவித்தோம். அரசாங்கத்தை விமர்சனம் செய்வதை நாம் தடைசெய்யவில்லை. ஆனால் அவர்கள் அதற்கிணங்கவில்லை. உங்களை உங்கள் இஷ்டம்போல விட்டுப் பார்த்துக்கொண்டிருக்கவா கூறுகிறீர்கள்: நாடு எரிந்து சாம்பலாகும்வரை, மக்களுக்கு அருந்துதற்கு ஒரு சொட்டுத் தண்ணீர் கிடைக்காது போகும்வரை, இதே போன்று மின்சாரம், உணவு என்பன கிடைக்காது போகும்வரை, வைத்தியசாலைகளில் நோயாளிகள் மரணிக்கும்வரை, பாடசாலையில் மாணவ மாணவிகள் கவனிப்பாரற்று விடப்படும்வரை, எம்மை வெறுமனே பார்த்துக்கொண்டிருக்கவா கூறுகிறீர்கள்? எம்மால் அவ்வாறு ஆட்சி செய்ய முடியாது.

அவசரகாலச் சட்டத்தை அறிமுகம் செய்துவிட்டு ஒளிக்கவில்லை என்று நீங்கள் கூறுகிறீர்கள். 1971 ஏப்பிரல் 5 ஆந் திகதி உங்களது பாராளுமன்ற உறுப்பினர்கள் சிராவஸ்தியில் கட்டிலுக்கு அடியில் ஒளித்திருந்த கதை உங்களுக்குத் தெரியும்.

அவர்கள் இன்னொருமுறை திரும்பவும் அழைக்கப்படமாட்டார்கள் என்பதை அரசாங்கத்தின் சார்பாகக் கூறவிரும்புகிறேன். நாம் மிகவும் வருந்துகிறோம். அவர்களின் குடும்பங்கள் துன்பப்படவேண்டியிருக்கும். ஆனால் இவை எம்மால் ஏற்படுத்தப்படாது இருக்கும் போது எம்மால் ஒன்றும் செய்யமுடியாது. உங்களை வேலைநிறுத்தம் செய்யும்படி தூண்டினோரைப் போய்ச் சந்தியுங்கள். அவர்களைப் பொறுத்தளவில் அவர்களுக்கு ஒருவகையான குறையுமில்லை. அவர்கள் நீதிமன்றங்களில் வழக்காடுவோராக இருந்தால் அவர்கள் நல்ல சம்பளம் பெறுவார்கள். வியாபாரத்தில் ஈடுபட்டிருப்பதோ கொந்தராத்துக்கள் எடுத்திருப்பதோ அவர்களுக்கு அதிக பணத்தைத் தேடிக்கொடுக்கும். அவர்கள் அரசியலில் ஈடுபடுவது காற்று வாங்குவதற்காக, பின்னேரங்களில் காலிமுகத்திற்குச் செல்வதற்கு ஒப்பானதாகும். நாட்டிற்கோ மக்களுக்கோ அவர்கள் தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்களுமல்ல. அதைப்பற்றிக் கவனமெடுப்பவர்களுமல்ல. அப்படியில்லாவிடின், அவர்களின் அரசாங்கத்தின்போது ஒரு வித்தியாசமான கொள்கையையும் தற்போது வேறொரு கொள்கையையும் அவர்கள் ஏன் தழுவுகிறார்கள் என நான் கேட்கிறேன். வேலைநிறுத்தம் தடைமுறையில் இருந்தபோது மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களால் இச்சபையில் நிகழ்த்தப்பட்ட பேச்சுக்களைச் சபையினர் முன் நான் வாசித்தேன்.

முதலாவது புகையிரத வேலைநிறுத்தம் ஆரம்பமானபோது மேன்மைதங்கிய ஜனாதிபதி அந்த நடவடிக்கைகளைக் கையாண்டார். எமது தொழிற் சங்கங்கள் எம்மைக் குறைகூறியுங் கூட அவர்களை அவர்களது வேலைத் தலங்களுக்குச் சென்று வரவைப் பதியும்படியும் கடமைகளை மேற்கொள்ளும்படியும் புத்தி கூறினர். வேலைநிறுத்தமானது நாட்டிற்கு மட்டும் பாதிப்பினை ஏற்படுத்துவது மட்டுமல்ல. அப்போதைய அரசாங்கத்தின் பதவிக்காலத்தை ஒரு வருடத்தினால் அதிகரிக்க அவ்வரசுக்கு ஒரு அதிகாரத்தையும் கொடுக்கிறது என்பதை அவர்களுக்கு விளக்கினோம். எமது தொழிற்சங்கங்கள் இம்முறைக்கு எதிர்ப்புத் தெரிவித்தபோதும் நாம் அதனையே கையாளத் தவறவில்லை. மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு அரசாங்கத்தை வேலைநிறுத்தம் மூலமோ அல்லது பயங்கரவாத நடவடிக்கை மூலமோ கவிழ்ப்பது நியாயமற்றதும் முடியாத செயலுமென்பதை நாம் உறுதியாக நம்புகிறோம். 5 வருடத்திற்கு அரசாள அவர்களுக்கு அதிகாரம் இருந்தபோதும் இதனாலேதான் நாம் 7 வருடங்கள் பொறுத்திருக்கவேண்டியிருந்தது. ஆனால் அவர்களுக்குப் பொறுமையில்லை. இப்பயம்தான் அவர்கள் சமீபத்தில் இந்தியாவுக்குச் சென்றபோது "இந்த அரசாங்கம் 1983 வரைக்கும் பதவியிலிருக்குமென்று நான் நம்பவில்லை" என்ற வார்த்தைகளைக் கூறவைத்தது. நாம் சரியான நடவடிக்கை எடுக்கவில்லை என்று எம்மேல் சுமத்தும் குற்றம் யாது? தகுந்த நேரத்தில் சரியான நடவடிக்கை எடுக்கத் தவறியபடியால் நாடு பாழடைந்துவிட்டதா? சரியான தகுந்த நடவடிக்கை எடுத்திருக்காவிடின் இந்நாட்டு மக்கள் இவ்வரசாங்கத்தைக் கலைத்திருப்பார்கள். 1947 ஆம் ஆண்டில் பொதுஜன பாதுகாப்புச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தது ஐ. தே. கட்சி அரசாங்கமாகும். இந்த பொதுஜன பாதுகாப்புச் சட்டத்திற்குக் "கொலைகாரச் சட்டம்" என்று பெயர் வைத்தார்கள். இவர்கள், ஒவ்வொரு முறையும் தாங்கள் அதிகாரத்திற்கு வந்த நேரம் இச்சட்டத்தால் தம்மைப் பாதுகாத்துக் கொண்டதும் அவர்களே. அவர்கள் இச்சட்டத்தைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டதுமல்லாமல் அதற்குப் பயங்கர அதிகாரங்களைக் கொடுத்துக் கூடுதலான சக்திவாய்ந்ததாக்கினார்கள். இப்படியான ஒரு சட்டம் கையில் இருக்கும் போது நாட்டில் பலாத்காரம் கட்டவிழ்க்கப்பட்டு பதட்டமானநிலை ஏற்படும்போது எந்த அரசாங்கம் அதைப் பாவிக்காமல் இருக்கமுடியும்? 10 இலட்சம் தொழிலாளர்களுள் 40,000 பேரை இந்நாட்டின் 1 கோடி 40 இலட்சம் மக்களின் மேல் அதிகாரம் செலுத்த விட முடியுமா? 1964 பெப்ருவரி 28 ந் திகதிய உத்தியோகபூர்வ அறிக்கையின் 55 ஆம் அத்தியாயத்தின் 2986 ஆம் பகுதியை நான் வாசிக்கிறேன் :

இவ்வரசாங்கம் தம் அதிகாரத்தைப் பாவித்துப் பொதுமக்களின் நலனைக் கவனித்து அவர்களைப் பாதுகாத்தே தீருமென்று நான் டாக்டர் விக்கிரமசிங்காவுக்குக் கூறிவைக்க விரும்புகிறேன்.

இவ்வகையான நடவடிக்கைகளை எந்த அரசானது பார்த்துக்கொண்டு வாளாவிருக்க முடியுமா? இப்படியான ஒரு அரசாங்கம் ஒரு நாட்டை ஆளத் தகுதியானதா எனக் கேட்கிறேன். ஆகவேதான் நாம் பொதுசன பாதுகாப்புச் சட்டத்தை அமுலாக்கினோம். ஆயிரக்கணக்கான மக்களின் உயிர்களைப் பொறுத்தளவில் ஆஸ்பத்திரிகளில் கடமைபுரிய வேண்டிய வைத்தியர்கள் தம் வேலைகளை நிறைவேற்ற மறுக்கும்போது அவசரகாலச் சட்டத்தை ஏன் கொண்டுவரக்கூடாதென நான் கேட்கிறேன். நோயாளரின் நலனைப்பேண சட்டத்தை ஏன் அமுலாக்கக்கூடாது.

1964 ஆம் ஆண்டு ஒரு வேலைநிறுத்தம் ஏற்பட்டபோது கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் டாக்டர் எஸ்· ஏ. விக்கிரமசிங்க இச்சபையில் என்ன கூறினார்? இதே வேலைநிறுத்தத்தில் ஸ்ரீ ல. சு. க· அரசாங்கத்திற்கு டாக்டர் என். எம். பெரேரா எதைச் சொன்னார். 6.3·64 ஆந் திகதிய உத்தியோக பூர்வமான அறிக்கையின் 55 ஆம் அத்தியாயத்தின் 3647 ஆம் பந்தியின் படி டாக்டர் என்· எம். பெரேரா ஆற்றிய உரையைக் கருத்திற்கொள்கிறேன். அவர் கூறியதாவது:—

"ஆயிரக்கணக்கான நோயாளர் துன்புறும் இவ்வேளையில் தற்போது ஒரு அவசரகால நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறோம். ஆகவே அமைதியாக இருங்கள்" என்று மாத்திரம் கனம் அமைச்சர் கூற அனுமதிக்க மாட்டேன். நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணிக்கு ஒரு ஏழை மனிதன் வந்து தனது பிள்ளை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப் பட்டிருப்பதாகவும், ஆஸ்பத்திரி அதிகாரிகள் ஒரு சத்திரசிகிச்சை செய்வது அவசியமென்றும் ஆனால் அதற்கு ஒரு வைத்தியர்களும் இல்லை என்றும் கூறுகிறார்கள் என்றும் சொன்னார்· அந்த ஏழை மனிதன் என்னை நடு இரவில் எழுப்பி இந்த மனதை உருக்கும் கதையைக் கூறினார். அப்பிள்ளையிலேயே அவரின் வாழ்க்கை தங்கியிருக்கக்கூடும். ஆனால் அப்பிள்ளையைக் காப்பாற்றுவதில் நம்பிக்கை இல்லை. இது வைத்தியர்களின் அசிரத்தையைக் காட்டுகிறது. நாம் இதற்கு என்ன செய்கிறோம்? உறுதியான நடவடிக்கை எடுக்க நீங்கள் முன்வரவில்லை. நாட்களை இப்படியே கழிய விடுகிறீர்கள்."

நிமிடமாவது இப்படிக் கழிய நாம் விடமாட்டோம். காலஞ்சென்ற டாக்டர் என். எம். பெரேராவுக்கு நான் சொல்வது கேட்குமானால் அவர்

கேட்கட்டும். "கலாநிதி அவர்களே, நாம் நாளொரு வண்ணமாக இந்நிலைமையை நீடிக்கவிட மாட்டோம்."

இந்தியாவுக்குச் சென்றிருந்த அத்தனகலை பா. உ. தரைப்படையினரைப் பற்றி விமர்சித்திருந்தார். 1971 இல் ஏற்பட்ட பயங்கரவாத நிலை பற்றி விபரிக்கத் தேவையில்லை. நீங்கள் எல்லோரும் இதை ஒரு போர் என கருதினீர்கள். இலங்கை மின்சாரசபை வேலைநிறுத்தம் மேற்கொண்ட போது ஸ்ரீ ல. சு. க. யின் தலைவர் அவசரகாலச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தார். வேலைநிறுத்தக்காரர்களை வேலைசெய்யாவிடின் அவர்களைத் தங்கள் வீடுகளில் இருக்கும்படி அவர் கூறவில்லை.

கேல், சிவதாசன் எனும் பொறியியலாளர்களின் வீடுகளுக்குத் தரைப்படை ஆட்களைப் புகப்பண்ணினர். அவர்கள் அந்நேரம் போட்டிருந்த உடுப்புக்களுடன் வீட்டிலிருந்து வேலைத்தலங்களுக்குத் துவக்குமுனையில் வேலைக்காகக் கொண்டு செல்லப்பட்டனர். இப்போது அவர்கள் துவக்குகளைப் பற்றியும் தொழிற் சங்கங்களைப்பற்றியும் தொழிற் சங்க நடவடிக்கைகளைப் பற்றியும் கதைக்கிறார்கள்.

மனித உரிமைகள் தொடர்பான உலகப் பிரகடனத்தின் 12 வது ஷரத்தை, அரசாங்கத்தின் இந்நடவடிக்கை மீறுகிறது. இந்த ஷரத்து பின்வருமாறு கூறுகிறது :—

தற்பொழுது எவராவது ஒருவரது சொந்த விடயங்களிலோ குடும்ப விடயங்களிலோ அல்லது கடிதத் தொடர்புகளிலோ அவரது கௌரவத்தை அல்லது மதிப்பைப் பாதிக்கும் வண்ணம் தன்முனைப்பான தலையீட்டுக்கு ஆளாக்கப்படுதல் கூடாது.

அத்தகைய குறித்த தலையீடு அல்லது தாக்கத்திற்கு எதிரான சட்டத்தின் பாதுகாப்பிற்கு எல்லோருக்கும் உரிமையுண்டு.

அவர்கள் மனித உரிமைகளுக்கு எதிராக வேலை செய்கிறார்கள். யாரும் ஒருவர் வேலை செய்யாது இருந்தால் அது அவரைப் பொறுத்த விஷயம். அவர் வீடுசெல்ல நேரிடலாம். எங்களாலும் அவர்களைத் துவக்குமுனையில் திருப்பி எடுக்க முடியும். நாம் ஒரு நாளும் ஒருவருக்கும் பின்னால் துவக்கை நீட்ட மாட்டோம். "நாம் என்ன சொன்னோம். நாம் உங்கள் எல்லோரையும் பதவிநீக்கம் செய்யவில்லை. வேலைக்கு வரவேண்டாமென உங்களை ஒருபோதும் கேட்கமாட்டோம். உங்கள் எல்லோரையும் நாம் துரத்தவில்லை. உங்கள் எண்ணத்தின்படியே வேலைக்கு வரத் தவறினீர்கள். அது உங்கள் விருப்பமானால் அப்படியே இருக்கட்டும். நாம் சொல்வதெல்லாம் இது தான். நீங்கள் எல்லோரும் அதை உணர்ந்தால் வேலை செய்யாமல் வாழ உங்களால் முடியும். அப்படியே இருக்கட்டும். உங்களுக்கு வெற்றிகிடைக்க வாழ்த்துகிறோம். இதைத்தவிர வேறு ஏதாவது

எம்மால் செய்யமுடியுமா ? அவர்கள் நாம் என்ன செய்யவேண்டுமென்று எதிர்பார்க்கிருர்கள் ? அத்தனகல பா. உ. செய்த வழியில் அவர்களைக் கொண்டு வரும்படி எங்களுக்கு ஆலோசனை கூறுகிருர்களா ?

**சம்பளம்**

சம்பளத்தைப் பற்றிக் கதைக்கிருர்கள். நிதி அமைச்சராக இருந்த கலாநிதி என். எம். பெரேரா வேதனத்தைப் பற்றி என்ன சொன்னுர் ? ஆனுல் அவர் எதிர்க்கட்சியில் இருக்கும்போது அல்ல. பல சந்தர்ப்பங்களில் நாம் வேதனத்தை உயர்த்தியுள்ளோம். இன்னும் ஏதாவது செய்ய இருக்கிறேம். ஆனுல் வங்கி ஊழியர்கள் வேதன உயர்வைக் கேட்கும் போது நிதி அமைச்சரான அவரின் கொள்கை என்ன விதமாக இருந்தது? 1972 ஆம் ஆண்டு செப்டம்பர் 5 ஆந் திகதிய உத்தியோகபூர்வ அறிக்கையில் 148 ஆம் பந்தியில் அவர் பின்வருமாறு கூறுகிருர் :—

**டாக்டர் என். எம். பெரேரா**

" வேலைப் பலத்தினது வேதன அமைப்பானது எமது நாட்டின் பொருளாதாரத்திற்குப் பொருந்தக்கூடிய விதமாக தீர்மானிக்கப்படவேண்டும். அரசாங்கம் எதிர்காலத்திலும் கடைப்பிடிக்கப்போகும் வேலையின் தொழிற் திட்டம் இதுவேயாகும். இத்தகைய பிரயோசனமற்ற நடவடிக்கைகளினுல் சோசலிசத்தை அடைய முடியாது. நாம் இந்நாட்டினை அபிவிருத்தி செய்யவேண்டுமெனின் இப்போது நாம் சென்றுகொண்டிருக்கும் பாதை மாற்றப்படல் வேண்டும்.

இவ்விடயங்களை உணர்ந்து அதற்கேற்றபடி ஒழுகுமாறு நான் வங்கி ஊழியர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இதுகாலவரை வங்கி ஊழியர்கள் வேண்டுகோள் எதனையும் எனக்குவிடுக்கவும் இல்லை. என்னை அவர்கள் நாடவுமில்லை.

அவ்வாறு செய்யுமாறு நாம் அவர்களைக் கேட்கவில்லை. எம்மிடம் வர வேண்டாமெனவே நாம் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேம்.

வேலைநிறுத்தத்தின் பின்தான் அவர்கள் எனக்குக் கடிதமெழுதியுள்ளனர். ஆனுல் கடமைக்குத் திரும்புமாறு நான் அவர்களை ஏற்கெனவே வேண்டியுள்ளேன். அவர்கள் கடமைக்குத் திரும்பாதவிடத்து இவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கைகள் எடுக்க அரசு எண்ணியுள்ளது. நானை அளவில் அவர்கள் கடமைக்குத் திரும்பத் தவறுவார்களேயானுல் அவர்களின் சேவை நிறுத்தப்படுமென நாம் அவர்களுக்குத் தெரிவித்துள்ளோம். அவர்களது இச்செயலொன்றே அதனை எய்தவைக்கும். நாங்கள் நிச்சயமாகவே புதிய ஆட்களைச் சேர்க்கவுள்ளோம். இது தொடர்பாகப் பின்னர் எவ்வித தாட்சண்யமும் காட்ட நாம் எப்போதும் எண்ணவில்லை.

அன்பான மாண்புமிகு கலாநிதி என். எம். பெரேரா அவர்களே, உங்களில் நாம் வைத்திருக்கும் மதிப்பின்பேரில் உங்களின் அந்த ஆலோசனையை நாம் பெறுகிறோம். ஆனால் உங்களது ஆதரவாளர்கள் அதற்கு எதிராக இருக்கிறார்கள். மதவாச்சி பா. உ. வும் எனது நெருங்கிய நண்பரும் (மைத்திரிபால சேனநாயக்க) அவசரகாலப் பிரகடனம் தொடர்பாக என்ன கூறியுள்ளார்? தொழினுட்ப அலுவலர்களின் வேலைநிறுத்தம் தொடர்பாக அவர் ஒரு அறிக்கை விட்டிருக்கிறார். 1972 ஆம் ஆண்டு செப்டெம்பர் 5 ஆம் திகதிய உத்தியோகபூர்வ அறிக்கையில் 154, 155 ஆம் பந்தியில் அவர் கூறியிருப்பதாவது :—

"அமைச்சரவையினால் மேற்கொள்ளப்பட்ட முடிவுகளைத் தொடர்ந்து இம்முடிவானது 1972 ஒகத்து மாதம் 16 ஆம் திகதி வேலைநிறுத்தம் செய்தோரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அதாவது அவர்களின் சேவை அத்தியாவசிய சேவையாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள எல்லா அலுவலர்களும் 1972 ஒகத்து மாதம் 21 ஆந் திகதி காலை 9 மணிக்குமுன் கடமைக்குச் சமூகமளிக்குமாறு வேண்டப்படுகிறார்கள். அத்துடன் அறிவித்தபடி கடமைக்குச் சமூகமளிக்கத் தவறியோர் தமது பதவியை இழந்தவர்களாகக் கருதப்படுவார்கள். இதனால் ஏற்படும் வெற்றிடங்களும் வேலை மேற்பார்வையாளரின் ஒழுங்குவிதிகளின் கீழ் வரும் பதவிகளுக்கும் அமைச்சானது விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

ஆனால் இற்றைவரை நாம் விண்ணப்பங்களைக் கோருவதுடன் மட்டும் நிற்கவில்லை. அனேக வெற்றிடங்களை நிரப்பியுமுள்ளோம். உப சபாநாயகர் அவர்களே சில செய்திப் பத்திரிகைகளில் வந்துள்ள கூற்றுக்களை நான் கவனித்தேன். அதாவது முன்னாள் உயர்நீதிமன்ற நீதவான் திரு. டி. எஸ். பெர்னாந்துவினால் கூறப்பட்டது. அவர் முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவராகக் கடமையாற்றினார். பொதுஜனப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டுள்ள அத்தியாவசிய சேவைகள் கட்டளையானது ஒரு செல்லாக்காசு என அவர் கூறியுள்ளார்.

1980 யூலை 18 ஆந் திகதிய "அத்த" பத்திரிகை பின்வருமாறு கூறுகிறது. :—

அவசரகாலச் சட்டம் ஒரு செல்லாக்காசு

முன்னாள் பிரதம நீதியரசர்—டி. எஸ். பெர்னாந்து,

வேலைநிறுத்த பயமுறுத்தல்களினால் ஏற்படக்கூடிய விளைவுகளுக்கு அன்றி, வேலைநிறுத்தத்தைத் தடைசெய்வதற்கு அரசாங்கம் அவசரகால விதிகளை ஏற்படுத்தி சகல சேவைகளையும் அத்தியாவசிய சேவைகளாகப்

பிரகடனப்படுத்தியிருப்பினும், அத்தியாவசிய சேவைகளின் கீழ் எந்த ஒரு ஊழியரையும் வேலைநீக்கம் செய்ய முடியாதென முன்னாள் பிரதம நீதியரசரும் அரச வழக்கறிஞருமான திரு. டி. எஸ். பெர்னாந்து தெரிவித்துள்ளார். அப்படியொரு கருத்தை அவர் தெரிவித்திருப்பார் என என்னால் நம்பமுடியவில்லை. என்னிடமுள்ள இரு நீதிமன்றத் தீர்ப்புக்களின் அடிப்படையில் ஆராயும்போது அவர் இப்படியான ஒரு கருத்தைத் தெரிவித்திருப்பார் என நம்புவது கடினமான ஒரு காரியமாகும். "டைம்ஸ் ஒவ் சிலோன்" பத்திரிகை காரியாலயம் தனியார் நிலையமாக இருந்த காலத்தில், அவசரகாலச் சட்டம் அமுலில் இருந்தபோது, மிருகக்காட்சிச்சாலை ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்தனர். அவர்கள் கடமைக்கு வரவில்லை. நீங்கள் இந்த சம்பவத்தை மறந்திருக்க மாட்டீர்கள் என நம்புகிறேன். அப்போது தொழில் கமிசனர், அந்த தொழிலாளர்கள் வேலையைவிட்டு விலகியவர்களாகக் கருதப்படுவதாகத் தெரிவித்தார். அவர்கள் மேல் நீதிமன்றத்தின் உதவியை நாடினார்கள். மேல்நீதிமன்றத்தின் தீர்ப்பு என்னவாக இருந்தது? அவர்கள் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு முறையீடொன்றை தாக்கல் செய்தனர். மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் திரு டி. எஸ். பெர்னாந்து, திரு. சிறிமானே, திரு. தென்னக்கோன் ஆகியோரே நீதியரசர்களாகக் கடமையாற்றினர். மேல்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்பு என்னவாக இருந்தது? முழுக்கூற்றையும் வாசிக்கத் தேவையில்லை என்று நினைக்கிறேன். 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க (நானாவித ஏற்பாடுகளும் தத்துவங்களும்) ஒழுங்கு விதிகள், 1972 ஆம் ஆண்டின் அத்தியாவசிய சேவைகள் கட்டளையின் 11 ஆம் பந்தி வர்த்தக அல்லது வியாபாரப் பொறுப்பேற்பு புதினப்பத்திரிகை வியாபாரமொன்றிற்கான விளக்கத்திற்கும் பொருந்துவதானது. 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க தொழிலாளர் தொழிலிருந்து நீக்கப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் —அத்தியாவசிய சேவை ஒன்றில் உள்ள தொழிலாளருக்கு அது பொருந்தும் எல்லைகள்.

1972 இன் அவசரகால விதிகளின் கீழ்வரும் அத்தியாவசிய சேவைகள் கட்டளைப்படி; அத்தியாவசிய சேவைகளின் கீழ் வரும் ஊழியர்கள் தமது தொழில்களில் இருந்து விலகிக்கொண்டவர்களாகவும், அதனால் அவர்களது தொழில்தருனர்கள் வேலை வழங்க மறுக்கும் இடத்து அதற்கு உரிமைகோர முடியாதவர்களாகவும் உள்ளனர். இவர்கள் 1971 இன் வேலையாட்கள் தொழிலில் இருந்து நிறுத்தும் சட்டத்தின், பிரிவு 6 இல. 45 இன் கீழ் தொழில் ஆணையாளரின் ஊடாக வேறுதொழில் தேட வேண்டும். 1972 ஆம் ஆண்டின் அத்தியாவசிய சேவைகள் கட்டளையின் 11 ஆம் பந்தியில் இலாபத்திற்கு பொருட்களை விற்கும், வினியோ

கிக்கும் வியாபாரங்கள் அனைத்தும் அத்தியாவசிய சேவைகளின்கீழ் வரும். அதன் பிரகாரம் பத்திரிகைப் பிரசுரத்திலேயே பிரதான நோக்க முடைய ஒரு கம்பனி 11 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது போல தனியார் வியாபார ஸ்தாபனமாகும்.

**உப சபாநாயகர் அவர்களே!** இத்தகைய நிலைமைகளில் எமது ஜனாதி பதி எவ்விதம் செயல்பட்டார் என நான் உங்களுக்கு விளக்கினேன். இவ ரது செயலில் அரசியல் குட்டிக்கரணம் கிடையாது. எதிர்க்கட்சியிலிருப் பினும் அல்லது அரசாங்கத்திலிருப்பினும் இத்தகைய நிலைமைகளில் அவ ரது கருத்து ஒரேமாதிரியாக நிலையானதாக இருக்கின்றதுடன், அவர் தற்போது ஜனாதிபதியாகவிருக்கும் காலத்திலும், முன்னர் பாராளு மன்ற உறுப்பினராகவோ அல்லது அமைச்சராகவோ இருந்த போதும் இதே கொள்கையைத்தான் தொடர்ந்தும் கூறிவந்துள்ளார். இந்த பாராளுமன்ற கட்டிடத்தில் இதைப்போன்றதொரு நிலைமையில் அவர் முன்னொரு நாள் ஆற்றிய உரை ஒன்றை உங்களுக்கு நான் கூற விரும்பு கின்றேன். 1968 ஆம் ஆண்டின் டிசம்பர் 7 ஆம் திகதி "ஹன்சார்ட்" இன் 273 ஆவது பந்தியில் இருந்துதான் இதனைக் குறிப்பிடுகிறேன்.

1968 இன் டிசம்பர் 7 ஆம் திகதி ஹன்சார்ட்டில் 273 ஆவது பந்தியி லிருந்து நான் குறிப்பிடுவது;

"கௌரவ ஜே. ஆர். ஜயவர்தன,

இப்போது இது சிரிப்பிற்குரிய ஒரு விடயமாகியுள்ளதாயினும், 27 ஆம் திகதி அவ்விதம் இருக்கவில்லை. இந்த நடவடிக்கைகளைப் பாரதூரமாகக் கவனத்திற்கெடுத்துக் கொண்டிருந்தால், அவர்கள் கூறியது நடந்திருந் தால்—நாங்கள் அவ்விதம் நடக்கலாம் என நம்பினோம். அத்தியாவசிய சேவைகள் முற்றாக நிறுத்தப்பட்டிருக்கும்—கப்பல்களில் ஏற்றி இறக்கு தல், தந்தி சேவைகள், கடிதங்களைத் தபால் செய்வது, தண்ணீர் விநி யோகம், நீர் இறைக்கும் நிலையம், சாக்கடை, உள்ளூர் ஆட்சி நிர்வாகம், புகையிரத சேவைகள், பஸ்சேவைகள் போன்ற அத்தியாவசிய சேவை கள் ஸ்தம்பிதமடைந்திருக்கும். எனவே, இன்று நீங்கள் இவற்றைப் பார தூரமாகக் கருதுவதாகவிருந்தால், உங்களை நான் ஒன்று கேட்கிறேன். முத லில், இச்சேவைகள் அத்தியாவசியமென்று நீங்கள் கருதுகின்றீர்களா? இல்லையா? நீங்கள் இல்லையென்று கருதினால் கேள்வியே எழாது. அவர் களுடைய இடத்தை நீங்கள் எவ்விதம் நிரப்புவீர்கள்? அவர்களை அத்தி யாவசியமானவர்கள் என்று நீங்கள் கருதினால், ஒரு அரசாங்கம் இந்த அத்தியாவசிய சேவைகளின் பயன்களை அதன் பொதுமக்களுக்கு எவ் விதம் வழங்கும்? பொதுமக்களே அவர்களுக்குத் தமது பணத்தைச் செல விட்டுள்ளனர். நீங்களும் நானும் அல்ல. இன்று நாங்கள் இங்கு இருக்க

லாம். நானே நீங்கள் இங்கு இருக்கலாம். இந்த நாட்டை நீங்கள் நிர்வகிக்க வேண்டும். மின்சார இணைக்கள ஊழியர்கள் எமது அனல்மின் நிலையத்தில் வேலை செய்ய மறுத்தபொழுது திருமதி பண்டாரநாயக்காவுக்கு ஒரு கட்டத்தில் இந்த நிலைமை ஏற்பட்டது.

(திரு. கெனமன்)

மின்சார பொறியியலாளர்கள்.

(கௌரவ ஜே. ஆர். ஜயவர்தன)

ஆம் மின்சார பொறியியலாளர்கள் அவர் என்ன செய்தார்.

(டாக்டர் என். எம். பெரேரா)

ஆண்கள் அல்ல.

(கௌரவ ஜே. ஆர். ஜயவர்தன)

பொறியியலாளர்கள் ஆண்களே

பெண் பிரதமர் ஆண்களுக்கு என்ன செய்தார். அவர் துப்பாக்கி முனையில் அவர்களை வேலைக்குப் போங்கள் என்றார்.

(திரு. கெனமன்)

ஆண்கள் என்ன செய்தார்கள்?

(கௌரவ ஜே. ஆர். ஜயவர்தன)

ஆண்கள் துப்பாக்கிக்குப் பயந்து வேலைக்குச் சென்றார்கள். நாங்கள் அப்படிச் செய்தோமா? நீங்கள் நீர் இறைக்கும் நிலையத்தில், அனல்மின் சக்தி நிலையத்தில் வேலைசெய்ய நேர்ந்தால் நீங்களும் அவ்விதம் செய்திருப்பீர்கள் அல்லவா? அவருடைய கொள்கையைப் பாராட்டுகிறேன்; அதற்கு நான் ஆதரவளிக்கிறேன்."

நான் இப்போது 276 ஆவது பந்தியிலிருந்து வாசிக்கிறேன்.

"கௌரவ ஜே. ஆர். ஜயவர்தன; இந்த நாட்டில் நடைபெறுவது எதனையும் கவனிக்காமல் இருக்க முடியாது. ஒன்றும் செய்யாமல் இருக்க முடியாது. மக்கள் ஜெயவேவா, ஜெயவேவா என கத்திக்கொண்டு போவதை அனுமதிக்க முடியாது. நாங்கள் நாகரிகமடைந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். பண்டையகால வேடர்களின் நிலைக்கு நாங்கள் போக முடியாது. அதனால் சில சேவைகளை அத்தியாவசிய சேவைகளாக்க முடிவெடுத்தோம்.

அடுத்தது என்ன, அத்தியாவசிய சேவைகளை ஏற்படுத்தியதன் பின்னர், அதனை எவ்விதம் நடைமுறைப்படுத்துவது. அத்தியாவசிய சேவைகள் சட்டம் பற்றி நீங்கள் நன்கு அறிவீர்கள். நீங்கள் அவ்வாறு கடமையாற்றியிருப்பீர்கள், அந்த காலகட்டத்தை கடந்திருப்பீர்கள். இந்த சேவையின் கீழ் நாங்கள் கடமையாற்றியிருக்கிறோம். அத்தியாவசிய சேவைச்சட்டத்தின்கீழ் வரும் ஊழியர்கள் 24 மணித்தியாலங்களுக்குள் கடமைக்கு வராவிடின் அவர்கள் மீது வழக்கு தொடரமுடியும்.

கனம் உப சபாநாயகர் அவர்களே, நாங்கள் இன்று அவசரகால சட்டத்தின்கீழ் நாட்டில் அமைதியையும், மகிழ்ச்சியையும், அபிவிருத்தியையும் ஏற்படுத்த மேற்கொண்டுள்ள கொள்கைகளைச் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினர் கண்டிக்கிறார்கள். 1968 இல் தொம்பே பா. உ. மதிப்புக்குரிய திரு. பீலிக்ஸ் ஆர். டி. பண்டாரநாயக்க அப்போது எதிர்க்கட்சியில் இருந்த சமயம் ஆற்றிய உரையினைக் கூறுகிறேன். 1968 ஆம் ஆண்டு டிசம்பர் 7 ஆந் திகதிய ஹன்சாட்டின் 83 ஆம் அத்தியாயத்தின் 419 ஆம் பந்தியினை நான் குறிப்பிடுகிறேன்.

திரு. எவ். ஆர். டயஸ் பண்டாரநாயக்க............... உதாரணமாக திருமதி பண்டாரநயக்கா குறித்த சில ஒழுங்குவிதிகளையே பாவித்தார் என்பதை அவர் மறந்துவிட்டார். அவற்றுள் சிலவற்றை நான் வரைந்துள்ளேன் என நான் எண்ணுகிறேன்.

இதிற் குறிப்பிட்ட ஒன்று மாணிக்கக்கற் போன்றதாகும்.

—"1961 யூனில் திரு. தொண்டமான் தோட்டத் தொழிலாளர் அனைவரையும்—இ. தொ. கா. வும் ஜ. தோ. காவும் கூட்டாக—வேலை நிறுத்தத்திற்கழைக்கத் தீர்மானித்தது. அரசை முற்றாகச் செயலிழக்கச் செய்த அவ்வேலைநிறுத்தம் எதற்காக. சம்பளக் கோரிக்கை ஒன்றிற்கானதா அது? இல்லை. டாக்டர் நாகநாதனும் அவரது சகாக்களும் யாழ்ப்பாண மாநகரசபைப் பகுதியிலுள்ள கச்சேரிக்கு வெளியே தமிழ்மொழிக்குச் சம அந்தஸ்துக்கோரி சத்தியாக்கிரகம் செய்து இப்போது வெளியேற்றப் பட்டுள்ள அவர்களுக்குத் தமிழ்மொழிக்குச் சம அந்தஸ்து கொடுக்க வேண்டுமென்பதே அக்கோரிக்கை. வேலைநிறுத்தம் ஒன்றிற்குத்தான் அழைக்கவேண்டுமெனத் தொண்டமான் கருதினார். தமிழ்மொழிக்குச் சம அந்தஸ்துப்பெறும் நடவடிக்கை ஒன்றாக தேயிலைச் செய்கையாளரால் தேயிலைத் தொழிற்சாலைப் பொறிச் சாதனங்களுக்குள் குருந்துக்கல் தூள் எறியப்படவிருந்ததென கதைகள் உலாவின. தலைவர்களால் வேலை நிறுத்தக்காரர் தூண்டப்படுதல் அவசரகாலச் சட்டங்களால் சொத்துக்கள் பறிமுதலாக்கப்படும் நிலைக்கு இட்டுச் செல்லுகிறதென நான் அக் கட்டத்தில் கூறினேன்.

மாண்புமிகு ஜே. ஆர். ஜயவர்தன ; வேலைநிறுத்தம் எது என்றுனோ ?

திரு. எவ். ஆர். டயஸ் பண்டாரநாயக்க ; ஆம். நான் இதைக் கூறட்டுமா ?

அதனை வாசித்த உடனே தொண்டமான் வேலைநிறுத்தத்தைக் கைவிட்டார்," நாம் எடுத்த சில நடவடிக்கைகளுக்கு நாம் கண்டனத்திற்காளாயினோம். அம் மாணிக்கக்கல்லை அவர்கள் ஒதுக்கிவிட்டனர். நாம் அதனை மினுங்கச்செய்து உபயோகப்படுத்தி வருகிறோம். உப சபாநாயகர் அவர்களே, இவ்வரசாங்கமானது சமாதானத்தையும் ஒழுங்கையும் பொதுசன பாதுகாப்பையும் பாதுகாப்பையும் நிலைநாட்டுவதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளதுடன் அந்நடவடிக்கைகளுள் எதுவும் கைவிடப்படமாட்டாதெனவும் இச்சபைக்கும் இது மூலமாக நாடு முழுவதற்கும் தெரிவிக்க விரும்புகிறேன். நான் முன்பு கூறியது போல், கடந்த 3 வருடங்களில் நாம் நேர்மையான முறையில் மக்களுக்காகவே செயல்புரிந்துள்ளோம். நாம் யாருக்கும் தீங்கிழைக்க மாட்டோம். வேலைநிறுத்தத்தின் பயனாக வேலை இழப்பவர்கள் ஒவ்வொருவருக்கும் பொறுப்பு, வேலைநிறுத்தப் பின்னணியில் இருப்பவர்களே. இவ்வாறு தொழில் இழந்தோருக்கு, அப்பாவித் தொழிலாளருக்கு ஏதாவது நன்கொடை வழங்க தொழிற் சங்கங்கள் முன்வருமாயின் அதுவே சிறந்த வழி தொழிற்சங்கங்களுக்கு நிறையப் பண வசதியும் சொத்தும் உண்டு. தொழிற் சங்கங்கள் வங்கி கணக்குகளிலிருந்து பணம்பெற முடியாதவாறு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதுபற்றித் தீர்க்கமான முடிவு எடுக்க உள்ளோம். கண்மூடித்தனமான தொழிற்சங்கத் தலைவர்களின் தூண்டுதலால் அப்பாவித் தொழிலாளர்கள் கஷ்டப்படுகின்றனர்.

தொழிற் சங்கத் தலைவர்கள் வேலைநிறுத்தம் செய்யட்டும் என்று எம்மால் நிராகரிக்க முடியாது. இக்கட்சி மக்கள் எம்மை அவர்களது பாதுகாவலர்களாக ஏற்றுக்கொண்டுள்ளனர். அதனால் அவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடப்பதே எமது கடமையும் பொறுப்புமாகும்.

அரச திணைக்களங்களிலும் கூட்டுத்தாபனங்களிலும் 40,000 வெற்றிடங்கள் உள்ளன, என்று குறிப்பிட்டேன். கூடிய கெதியில் அந்த வெற்றிடங்களை நிரப்புமாறு கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமான எல்லா பொறுப்புக்களும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுடையதே. பிரதேச அடிப்படையில் ஆட்களை வேலைக்குச் சேர்த்தல் மாவட்ட அமைச்சர்களினதும் எம். பீ. களினதும் பொறுப்பாகும். மேலும் வேலை வங்கி விண்ணப்பங்களும் பரிசீலனை செய்யப்படும். வேலைக்குச் சேர்ப்பவர்கள் கூடிய மட்டும் அவ்வப் பகுதிகளிலேயே வசிப்பவர்களாக இருப்பதே நல்லது. என்பது எமது நோக்கம். தினமும் தொழில் நிமித்தம் மாத்தறையி

லிருந்து கொழும்புக்குப் பிரயாணம் செய்வோரை நான் அறிவேன். அவர்கள் விடியுமுன்னர் வீட்டிலிருந்து வெளியேறி இரவுநேரம் கழிந்து வீடு செல்ல வேண்டியுள்ளது. அவர்களில் பெரும்பான்மையினர் விடு முறை தினங்களில் மட்டுமே தமது குழந்தைகளைச் சந்திக்க முடிகிறது. சிலர் கொழும்பிலிருந்து நீர்கொழும்பிற்கும் மற்றும் சிலர் நீர்கொழும்பி லிருந்து புத்தளத்திற்கும் செல்கின்றனர். இது, பண்டைய நிர்வாக முறையையே காட்டுகிறது. இம் முறை மாற்றப்படவேண்டும். ஆங்கில மொழியில் அரசகருமங்கள் மேற்கொள்ளப்பட்ட காலத்தில் ஆங்கில மொழி கற்ருேர் ஒரு சிலரே இருந்தபடியால் அவர்கள் இடத்திற்கிடம் மாறித் தங்கள் உத்தியோகங்களைக் மேற்கொள்ள வேண்டியிருந்தது. ஆனுல் இன்று அந்நிலை மாறியுள்ளது. இன்று சிங்களம், தமிழ் ஆங்கிலம் ஆகிய மொழிகளைப் பயின்ருேர் பலர் இந்நாட்டில் இருக்கிருர்கள். வேலை வழங்குவதில் அவர்கள் எங்கெங்கு வசிக்கிருர்களோ அங்கேயே நியம னங்கள் வழங்குவதன் மூலம் வீட்டுப்பிரச்சினை பெருமளவு தீர்க்கப்படு கிறது. இன்று சில ஊழியர்களுக்கு இரு வீடுகளை அமைத்துப் பராமரிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. அதே போன்று அரசாங்க ஊழியர் ருக்கு வீடுகட்டிக் கொடுக்கும் பொறுப்பும் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள் ளது. எனவே இத்தகைய வேலைத்திட்டமொன்றைப் பின்பற்ற வேண்டிய நிலைமை அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளது.

அத்துடன் இன்று நாம் பெருமளவு வேறுபட்ட ஒரு உலகில்—சமூகத் தில் வாழ்ந்துகொண்டிருக்கிருேம். இன்றுள்ளது புதுப்பிரச்சினைகள். இவற் றிற்குப் பழைய தீர்வுகள் பொருந்தா, புதிய தீர்வுகள் காணப்பட வேண் டும். இன்று நாம் என்ன செய்கிருேம்? ஒரு புறத்தில் நாம் சுதந்திரம் என் கிருேம் ஒரு புறத்தில் விடுதலை என்கிருேம். அத்துடன் வேறுபல வேலைத் திட்டங்களையும் பின்பற்றுகிருேம். இது உண்மையில் சுதந்திர யுகத்திற்குப் பொருந்ாத, நாம் ஆழ்ந்து சிந்தித்துப்பார்க்க வல்லவை. முழு தொழிற் சங்க நடவடிக்கைகள் பற்றியும் நாம் புதிதாகச் சிந்திக்க வேண்டியுள்ளது. முதலாளி, தொழிலாளி என்ற சமூக அமைப்பைத் தொடர்ந்து முன் வைப்பதா அல்லது நாட்டின் சமூக அபிவிருத்தியில் சமபங்காளர்களாகப் பங்காற்றுவதா என்பது தொடர்பான செயற்படுத்தக்கூடிய அணுகு முறையின் தேவையை நோக்கி எமது சிந்தனையை நாம் செலுத்த வேண்டியிருக்கிருேம். முயற்சியின் அளவுக்கு உழைக்கக்கூடிய சமுதாய அமைப்பு ஒன்று இன்று எமக்குத் தேவையல்லவா?

உப சபாநாயகர் அவர்களே! ஒருவகையில் நாம் சிந்தித்துப் பார்க்கை யில் சுதந்திர நாடொன்றில், நாட்டின் பொறுப்பை நாட்டு மக்களே சிர மேற்கொண்டுள்ள ஒரு சூழ்நிலையில் நாட்டு மக்கள் ஆற்றும் பணிகளுக்

குப் பணத்தின் மூலம் நட்டஈடு வழங்கலாம் என நான் நினைக்கவில்லை. பணத்தின் மூலம் சம்பளம் வழங்க முடியுமென நான் நினைக்கவில்லை. ஒவ்வொருவர் புரியும் பணியை எடுத்து நோக்குங்கால் கூளங்குப்பைகளை அகற்றும ஒருவர் முதல் சமூகத்தின் உயர் மட்டத்தில் காணப்படுபவர் வரை எல்லாத் தரங்களிலும் தொழில்புரிந்து வருவோர் செய்யும் பணிகளின்பெறுமதியைப் பணத்தின் மூலம் செலுத்த முடியாது. இருந்தபோதும் சம்பளம், அதாவது வருமானம் ஒருவருக்கு அவசியம். ஏன் இது ? இது அவர்களது வாழ்க்கைக்காக. அதுவுமின்றி, அவர்கள் புரியுஞ் சேவைக்கு நட்டஈடாக அல்ல. ஒருவர் புரியும் சேவைக்கு நட்டஈடு வழங்கல் கஷ்டம். அவ்வளவு தூரம் முக்கியமான பணிகளை இச்சமூகத்தில் எல்லாத் தரங்களிலும் உள்ள எல்லோரும் செய்கின்றனர். உடல் ரீதியானதாகவோ உளரீதியானதாகவோ இச்சேவைகள் அமையலாம். எனவே சம்பளம் வருமானம் என்பனவற்றை நமது வாழ்க்கைக்காகவே நாம் பெற்றுக் கொள்கிறோம். நாம் பணி புரிவது அதற்காகவன்று. இக்கொள்கை எமது சமூகத்தின் எல்லாத் தரங்களிலும் உள்ள மக்கட் பிரிவினரின் மனத்தில் பதிதல் வேண்டும். இச் சபையின் கௌரவ உறுப்பினர்கள் தங்களது தொகுதிகளில் புரியும் சேவைகளை 1000 ரூபாவால் அல்லது 2000 ரூபாவால் அளவிட முடியுமா ? சட்ட சபையில் இருந்த உறுப்பினர் ஒருவருக்கு 400 ரூபா கொடுக்கப்பட்டிருந்தால், அந்த உறுப்பினர் வந்த சமூகத்தைப் பற்றிச் சிந்திப்பதாயிருந்தால், எத்தகைய மட்டத்திலுள்ள, எத்தகைய சொத்துக்களுள்ள குடும்பங்களிலிருந்து இவர்கள் வந்தார்கள்? அக்காலத்துச் சட்டசபை உறுப்பினர் ஒருவருக்கு இருந்த கடமைகள் பற்றிச் சிந்திப்பதாயின் இன்று இவ்வுறுப்பினர்களுக்கு வழங்கும் சம்பளம் இவர்கள் செய்யும் சேவைக்குப் போதுமானதா? அச்சேவைக்குச் சமமாகும் பொருட்டா நாம் இச்சம்பளத்தை வழங்கிறோம்? இல்லை. அத்தியாவசிய செலவுகளை ஈடு செய்யவே இது வழங்கப்படுகிறது. முடியுமாயிருந்தால் எவராவது சம்பளத்தை, மற்றும் விசேட படிகளை பெற்றுக்கொள்ள மாட்டார்கள். சட்டசபை உறுப்பினர் ஒருவருக்கு இருந்த வேலைபற்றி எனக்குத் தெரியும். இதைப்பற்றிச் சிந்திக்கையில் ஒரு சம்பவம் எனக்கு நினைவுக்கு வருகிறது. அன்றைய உறுப்பினர்கள் தங்கியிருப்பதற்கான அறைகள் இக்கட்டடத்திலேயே இருந்தன. இவ்வுறுப்பினர்களுள் ஒருவர் சபை நடவடிக்கைகள் முடிந்தவுடன் வேறு வேலையில்லாதபடியால் கோட்டைப் புகையிரத நிலையத்திற்குச் சென்று யாழ்ப்பாணம் அல்லது மட்டக்களப்புக்குச் செல்லும் புகையிரதத்தில் ஏறி உறங்கலறையில் நித்திரை செய்வார்கள். அங்கு சென்று பின்னர் தமது வேலைகளை முடித்

துக்கொண்டு பிற்பகல் புகையிரதத்தில் திரும்ப வருவார்கள். பின்னர் கோட்டை புகையிரத நிலையத்தில் இறங்கி வேறொரு இடத்திற்குச் செல்லும் புகையிரதத்தில் ஏறி பயணம் செய்வார்கள். இது உண்மையான சம்பவம். இவ்வுறுப்பினர் செய்வதற்கு வேறு எவ்வேலையும் இருக்கவில்லை. இவரைச் சந்திக்க யாரும் வருவதும் இல்லை. எமது நாடு அடிமைப்பட்டுக்கிடந்த வேளையில் அரசாங்க நிருவாகத்துறையே எல்லாவற்றையும் செய்து வந்தது. இன்று அப்படியா?

இன்று பிறப்புச் சான்றிதழிலிருந்து இறப்புச் சான்றிதழ் வரை எல்லாவற்றையும் செய்வதற்கு பாராளுமன்ற உறுப்பினரே தேவையாக உள்ளது. ஆனல் சம்பளம் வழங்குவது அச்சேவைக்காக அல்ல. எழுதுவினைஞரைப் பற்றிச் சிந்தியுங்கள். தொழில் நுட்பவியலாளர் ஒருவரைப் பற்றிச் சிந்தியுங்கள். வைத்தியசாலை ஊழியர்களைப் பற்றிச் சிந்தியுங்கள். அவர்கள் செய்வது எவ்வளவு கஷ்டமான பணிகள். அவர்கள் அவ்வாறு செய்யும் பணிகளுக்குப் பொருத்தமான சம்பளம் வழங்க முடியும் என நாம் நினைக்கவில்லை. யாருக்காக நாம் இந்தக் கடமைகளைச் செய்கிறோம். எங்களுக்காகத் தானே? இந்த நாடு இப்போது யாரின் கீழ் இருக்கிறது? வேறு வெளிநாட்டு ஏகாதிபத்தியம் இங்கு வந்து எமது நாட்டைக் கைப்பற்றி ஆட்சி நடத்தி எம்மை உறிஞ்சிக் கொண்டு போகும் என்றால் அப்போது நாம் அடிமைகள். அத்தகைய சூழ்நிலையில் நாம் செய்வதெல்லாம் எம்மை ஆளுவோருக்காகவே இருக்கும். இப்போது எம்மை உறிஞ்சுவது யார்? இப்பணிகளின் நன்மை யாரைச் சேருகிறது? இவையாவும் வேலை செய்யும் எல்லோரையுமே சென்றடைகிறது. மேற்கொள்ளப்படும் எல்லா நடவடிக்கைகளினதும் லாபம், பலன் அல்லது நட்டம் என்பனவற்றை எல்லாம் நாட்டு மக்களே பகிர்ந்து கொள்வர். வரிகள் மூலமாக இந்நாட்டு மக்கள் அவற்றிற்கு நட்டஈடு செலுத்துகின்றனர்.

நாம் பிரித்தானிய ஏகாதிபத்திய ஆட்சியின் கீழ் இருந்த 150 வருடங்களை பற்றிச் சிந்தித்துப் பார்ப்போம். சூரியன் அஸ்தமிக்காத இந்த சாம்ராஜ்யத்தில் பல நாடுகள் அடிமையாக இருந்தன. அவர்கள் செய்தது என்ன? இந்நாடுகளை அவர்கள் தங்களது வருமான வழிவகைகளைப் பலப்படுத்திக் கொள்ளப் பாவித்தார்கள். இந்நாட்டின் விவசாயத் துறையை அவர்கள் பாழடைய விட்டார்கள். அவர்களுக்குத் தேவைப்பட்ட தேயிலை, றப்பர், செய்கைகளுக்கென தொழிலாளர்களைப் பயன்படுத்தினர். வேற்று நாடுகளிலிருந்து இலாபத்துக்காக அரசியை இறக்குமதி செய்து எமது நாட்டு மக்களுக்கு வழங்குவதன் மூலம் இந்த நாட்டின் விவசாயத்துறையை அவர்கள் பாழடையவிட்டார்கள். ஐந்து சதம் 10 சதத்திற்கெல்லாம் ஒரு கொத்து அரிசியைக் கொடுத்தார்கள். இத

ளுல் எமது நீர்ப்பாசனங்கள் அழிந்தன. எமது கால்வாய்கள் காய்ந்து அழிந்தன. வயல்கள் வரண்டன. எமது சீவனோபாய வழிவகைகள், எல்லாம் சிதைந்தன. அடிமைத் தனத்திற்கு நாம் பழகிக் கொண்டோம். சம்பளத்திற்கு வேலை செய்யப் பழகிக்கொண்டோம். எமக்கு சுதந்திரம் தேவைப்பட்டது எதற்காக? அந்த அடிமை வாழ்க்கையை அப்படியே கொண்டு செல்லவா? அந்த முறையை மாற்றியமைப்பது இந்த அரசின் முயற்சியாகும். புதிய சமூக அமைப்பொன்றை உருவாக்குவதே எமது நோக்கம். நாம் இது பற்றி பொதுத் தேர்தலுக்கு முன்னரும், தெரிவித்திருந்தோம். அப்படி நாங்கள் சொன்னபோது சிலர் எம்மைப் பார்த்துச் சிரித்தார்கள். சுதந்திர தார்மீக அரசு ஒன்றை நாம் உருவாக்கப் போகின்ளேம், என்று நாம் கூறியபோது அப்போதைய ஸ்ரீ. ல. சு. க. அரசாங்கத்தின் வர்த்தக அமைச்சர் எம்மைப் பார்த்து 'தர்மிஷ்டர்கள்' என்று அழைத்தார். நாம் ஏன் அப்படிச் சொன்னேம்? இந்த கோட்பாட்டின் அடிப்படையில் இந்நாட்டு மக்கள் சமுதாயத்தை மாற்றியமைக்க வேண்டியிருந்தபடியாலேயே நாம் அங்ஙனம் கூறினேம். இந்த பாரம்பரிய ஆட்சி முறையைத் தொடர்ந்து நடத்த இங்கு நாம் வரவில்லை. வேறுபட்ட ஓர் ஆட்சி முறையை அறிமுகப்படுத்துவதே எமது நோக்கம். இதற்காக வேண்டித் தான் தேர்தல் முறையை மாற்றியமைத்தோம். குறுகிய வாதபேதங்களை உருவாக்கும் தேர்தல் தொகுதி முறையை அகற்றியது இதற்காக வேண்டியே. அதுமட்டுமன்று கிடைக்கும் வாக்குகளின் எண்ணிக்கைக்கேற்ப பிரதி நிதிகளின் எண்ணிக்கை அமையும் விதத்தில் நாம் இம்மாற்றத்தைக் கொண்டு வந்தோம். இது எமக்கு நன்மையல்லதான் எனினும் அதுவே சரியான வழியாக இருந்தபடியால் நாம் அதனை மாற்றி அமைத்தோம். இதற்காகவே விகிதாசார பிரதிநிதித்துவ முறையைக் கொண்டுவந்தோம். பிரதமரால் நியமிக்கப்படும் ஜனுதிபதிக்குப் பதிலாக மக்களால் தெரிவு செய்யப்படும் ஜனுதிபதியை நியமனம் செய்யும் முறையைக் கொண்டு வந்ததும் அதற்காகவே. இந்த ஜனுதிபதி முழு வாக்களிலும் 51% பெறவேண்டும்.

அவசர காலச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வரும் பட்சத்தில் 10 நாட்களுக்குள் அதற்கு பாராளுமன்ற அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். நான் இதற்கான பிரேரணையை நாளை இங்கு சமர்ப்பிப்பேன். அந்த விவாதத்தின் போது, அரசாங்கக் கட்சிக்கு 3 மணி நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. எதிர்க்கட்சிக்கு 2 மணி நேரம் வழங்கப்பட்டுள்ளது. மாலை 5 மணிக்கு இது தொடர்பான வாக்களிப்பு நடைபெறும். இப்பிரேரணை சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படல் வேண்டும். எவ்வளவு விரைவில் இந்த அவசரகாலச் சட்டத்தை நீக்க

முடியுமோ அவ்வளவு விரைவாக அதனை நீக்க நாம் உறுதியளிக்கின்ேறம். தேவைக்கதிகமான ஒரு வினுடியேனும் இச்சட்டத்தை வைத்திருக்க நாம் எதிர்பார்க்கவில்லை. கூடிய விரைவில் இவ்வெற்றிடங்கள் யாவற்றையும் நிரப்ப இன்னும் யாரும் போகப் போகின்ருர்களா என்பதையும் பார்த்துப் பின்னர் நாம் இதனை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவோம். அரசியல் சட்டத்தின் கீழ் இருக்கும் பொறுப்பு யாது? 3 மாதத்திற்கு மேல் அவசர காலச் சட்டத்தை வைத்துக் கொள்வதாயின் இச்சபையின் 2/3 அங்கத்தவர்களது சம்மதம் பெறப்படல் வேண்டும். அவர்கள் ஆட்சி செய்த 7 வருடங்களுள் 6 வருடங்கள் அவசர காலச்சட்டத்தின் கீழ் ஆட்சி செய்யப்பட்டன. அப்போது எமக்கு இச்சபையில் வந்து அது தொடர்பான விவாதங்களில் ஈடுபட ஒரு சந்தர்ப்பமேனும் அளிக்கப்படவில்லை. எல்லாச் சட்டங்களையும் அவர்கள் அன்று வாபஸ் பெற்றனர். நீதி மன்றத்தை நீதி அமைச்சுக்குக் கொண்டு வந்தார்கள். உங்களுக்கு அந்த வரலாறு தெரியும். சில சமயங்களில் நாம் அவசர காலச் சட்டத்தை அமுல் செய்யவேண்டி நேரிட்டது. எத்தகைய சந்தர்ப்பங்களில் நாம் அங்ஙனம் செய்தோம். நாம் பதவிக்கு வந்தது யூலை மாதத்தில். ஆகஸ்ட் மாதத்தில் இனக்கலவரம் ஏற்பட்டது. அச்சந்தர்ப்பத்தில் அவசர காலச் சட்டத்தை அமுல் செய்தோம். இதனை யாரும் பிழை என்று கூறினுர்களா? இல்லை. சூருவளி ஏற்பட்ட பொழுதும் அவசர காலச் சட்டத்தை நாம் அறிமுகம் செய்தமைக்காக எல்லாக் கட்சியினரும் மகிழ்ச்சி தெரிவித்தார்கள். இப்போது வேலை நிறுத்தப்பயமுறுத்தல் வந்துள்ளது. வேலை நிறுத்தம் செய்வதாக ஜனுதிபக்கு அறிவிக்கப்பட்டது. முதல் நாள் எழுதி யனுப்புகிருர்கள். 2 ம், 3 ம் நாட்களில் வேலை நிறுத்தம் செய்கிருர்கள். யூலை 14 ம் திகதி தொழிற் சங்கக் கூட்டுக் கமிட்டி மூலம் மூன்று கோரிக்கைகளை முன்வைத்து கடிதமொன்று அனுப்பப்படுகின்றது. 300 ரூபா உடனடிச் சம்பள உயர்வு, அதிகரிக்கும் வாழ்க்கைச் சுட்டெண் ஒவ்வொன்றிற்கும் 5 ரூபா வழங்குதல், யூன் மாதம் 5 ந் திகதி எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டோருக்கு வழங்கப்பட்ட தண்டனைகளை வாபஸ் பெறவேண்டும் என்பனவே. இம் மூன்று கோரிக்கைகளுமாகும். வேலை நிறுத்தம் செய்வதற்கான அறிவித்தலுடன் இக்கோரிக்கைகளை ஜனுதிபதிக்கு அறிவித்தார்கள். இப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கவென தொழிற் சங்கங்கள் அரசாங்கத்துடன் எத்தகைய பேச்சு வார்த்தைகளிலும் ஈடுபடவில்லை. ஜனுதிபதிக்கு கடிதம் அனுப்பிய தினத்திற்கு மறுநாளான யூலை 15 ந் திகதி இவர்கள் வேலைநிறுத்தம் செய்தார்கள். 24 மணி நேரத்துள் வேலை நிறுத்தம் ஆரம்பிக்கப்பட்டது. யூலை 16 ஆந் திகதி அவசர காலச் சட்டம் அறிமுகம் செய்யப்பட்டது. இந்தியாவில் திரிப்பூர் பகுதியில் ஏற்

பட்டுள்ள நிலைமை இங்கும் ஏற்பட இடம் விடக் கூறுகிறீர்களா? கம் போடியாவில் ஏற்பட்டுள்ள நிலைமை இங்கும் உருவாக வேண்டுமென எங்க ளுக்குக் கூறுகிறீர்களா? ஈரானில் ஏற்பட்டுள்ள நிலைமை இங்கும் ஏற்பட வேண்டுமென எங்களுக்கு நீங்கள் தெரிவிக்கிறீர்களா? அத்தகைய நிலை மைகள் ஒரு நாளேனும் இந்த நாட்டில் ஏற்பட இந்த அரசு இருக்கும் வரை நாம் இடம் வழங்க மாட்டோம். எத்தகைய சவால்களையும் எதிர் நோக்க நாம் தயார். எப்படி எங்களுக்கு இந்த வலிமை கிடைத்தது? வெடிகுண்டு மூலமோ துப்பாக்கி பைனற் என்பன மூலமோ அல்லது இராணுவம் மூலமோ இந்த வலிமை கிட்டவில்லை. இந்த வலிமை இந்தப் பலம் எமக்குக் கிடைத்தது இந்த நாட்டுப் பொது மக்களின் ஆதரவு மூல மாக.

நாம் கூடிய விரைவில் அபிவிருத்திச் சபைகளுக்கான தேர்தல்களை நடத்த உள்ளோம். அநேகமாக அடுத்த மாதம் அளவில் அபி விருத்திச் சபைகள் பற்றிய சட்டமூலம் தாக்கல் செய்யப்படும் இதற்கு முழுச் சபையிலும் ஆதரவு கிடைக்குமென நான் எதிர்பார்க்கிறேன். அதன் பின்னர் இதற்கான தேர்தல் சட்டவிதிகளைக் கொண்டு வந்து தேர் தல் நடத்துவதோடு நாம் பொதுமக்களிடம் செல்வோம். அவர்கள் தரும் தீர்ப்பை ஏற்றுக்கொள்ள நாம் தயார். இவ் அரசாங்கம் செல்லும் பாதையை இந்நாட்டு மக்கள் அறிவார்கள். இதனை அவர்கள் நன்கு விளங்கியிருக்கிறார்கள். ஏனையோருக்கு இது விளங்கியும் அவர்கள் விளங் காதது போல் பாசாங்கு செய்கிறார்கள். உண்மையில் நித்திரை செய்யும் மனிதனை எழுப்புவது இலகு. ஆனால் நித்திரை செய்வதாகப் பாசாங்கு செய்யும் ஒருவரை எவ்வளவுதான் முயற்சி செய்தாலும் எழுப்ப முடியா தல்லவா?

தொழிற்சங்க அங்கத்தவர்களுக்கு நான் விசேட வேண்டுகோளை விடுக்க விரும்புகிறேன். இன்று நீங்கள் சேர்ந்துள்ள சில தொழிற் சங் கங்கள் சில வகை வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது உங்களுக்குத் தெரி யுமா? சில தொழிற்சங்கங்களின் கொடுக்கல் வாங்கல்கள் அங்கத்தவர்க ளுக்குத் தெரியாது. அவற்றுக்கு இருக்கவேண்டிய கட்டணத்தை சம்ப ளத்தில் வெட்டிக் கொள்வதுதான் வேலை. அச்சங்கங்களில் அங்கத்துவம் வகிப்போரைக் கூட்டங்களுக்கு அழைத்து ஜனநாயக ரீதியில் எத்த கைய தொழிற்சங்க நடவடிக்கைக்கும் அவர்களது சம்மதத்தைப் பெறு வது கிடையாது. உயர்மட்டத்திலுள்ள 3, 4 பேர் "ஓடடா" என்றால் ஓட வேண்டியதுதான் "நில்லடா" என்றால் நிற்க வேண்டும்.

நான் எதிர்க்கட்சியினருக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். எமக்கு மக்கள் ஆணை அளித்தது, நீங்கள் சென்ற பாதையில் செல்வதற்கல்ல, மக்கள் எம்மை போகச்சொன்ன பாதையிலேயே நாம் செல்லத் தயார் என்பதை உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். உங்களைப் போன்று பதவிக் காலத்தை நீடிக்கவோ இடைத்தேர்தல்களை தாமதப் படுத்தவோ உள்ளூராட்சித் தேர்தல்களை தாமதப்படுத்தவோ நாம் மாட்டோம். உங்களைப் போன்று நாம் தேர்தலுக்குப் பயப்படப் போவதில்லை. "நாங்கள் பயம்" இடைத்தேர்தல்களை நடத்தப் போவதில்லை என்று நீங்கள் கூறினீர்கள். நாம் உங்களது கோட்டைக்கே போனோம். அக்கோட்டையை மக்கள் எம்மிடம் கையளித்தார்கள்.

நீங்கள் எம்மை மேலும் வலிமைப்படுத்துகிறீர்கள். எமது கட்சியை எமது மக்களை எமது அரசாங்கத்தைப் பலப்படுத்துகிறீர்கள். எனக்குத் தெரிந்தவரை இடை இடையே ஒரு இடைத்தேர்தலோ அல்லது வேலை நிறுத்தமோ நடைபெறவேண்டும். மக்களிடம் செல்லுகையில் என்ன கூறுவது? "இது என்ன வேடிக்கை உங்களுக்கு 2/3 அல்ல 5/6 பங்கு பெரும்பான்மை பலத்தை ஏன் தந்தோம் இச் சிறு கூட்டத்தினரின் பயமுறுத்தல்களுக்கு எம்மைப் பலியாக்கவா? என்று கேட்கிறார்கள். சம்பளத்திற்கு வேலை செய்யும் மக்களின் எண்ணிக்கையை நான் கூறினேன். அரசாங்கக் கூட்டுத்தாபனத் துறைகளில் சுமார் 10 இலட்சம் பேர் வேலை செய்கின்றனர். இவர்களில் ஒரு சிறு அளவினர்தான் சுமார் 40,000 பேர் தான் வேலை நிறுத்தம் செய்கிறார்கள். அரசாங்க சேவைகள் எதுவித இடையூறுகளும் இன்றி நடக்கின்றன. இதற்காக வேண்டியே நான் எல்லாத் துறையினருக்கும் அரசின் சார்பில் நன்றி தெரிவிக்கின்றேன்.

இன்று செய்யும் வேலையைப் பாருங்கள். புகையிரதத்தைத் தடம் புரளச் செய்கிறார்கள். இத்தகைய எத்தனை சம்பவங்கள் இன்று நடைபெற்றுள்ளன. எவருடைய உயிருடன் இவர்கள் விளையாடுகிறார்கள்? இவற்றை எல்லாம் செய்வது யார்? இத்தகைய பல சம்பவங்கள் பற்றிய விபரங்கள் என்னிடம் உள்ளன. புகையிரதங்களைத் தடம்புரளச் செய்தல் பஸ்களை அடித்து உடைத்தல், போன்றவற்றைச் செய்ய மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பற்றி அறிக்கைகள் எமக்குக் கிடைக்கின்றது. நானுஓயா, என்டேருமுல்ல, பூஸ்ச, பம்பலப்பிட்டிய, இரத்மலானை, வெயாங்கொட, அப்புத்தளை, எகொட உயன, பண்டாரவளை, அம்பவளை, வாதுவ, காலி, கடுகண்ணவ, அனுராதபுரம், கோட்டை, யாழ்ப்பாணம், ஆகிய இடங்களில் இத்தகைய சம்பவங்கள் நடைபெற்றதற்கான விபரங்கள் உள்ளன.

21.07.80 அன்று 22.45 மணி அளவில் ரோந்துக் கடமையில் ஈடுபட்டிருந்த 3 பொலிசார் பூங்குளம் புகையிரத நிலையத்திலிருந்து 1 மைலுக்கப்பால் ரெயில் தண்டவாளத்துடன் மூன்று இரும்புப் பாளங்கள் சேர்த்துக்

கட்டப்பட்டிருந்ததைக் கண்டுபிடித்தனர். இது உங்களுக்கு எதிராக வுமா? யாழ்ப்பாணத்தில் இது ஏன் என்பது எனக்கு விளங்கவில்லை இதே தினம் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வந்த புகையிரதம் இனந் தெரியாத சிலரின் கல்வீச்சுக்கு இலக்கானது.

20.07.80 அன்று வெயாங்கொடையில் 250 ம் இலக்க புகையிரதத்தின் தலைமை காட் அன்றைய தினம் 0255 மணி அளவில் 23½ ஆவது மைல் கல் பாலத்தில் ஒரு யார் நீளமான தண்டவாளத் துண்டொன்று ரயில் பாதையில் வைக்கப்பட்டிருந்தது பற்றிப் புகார் செய்தார். ரயில் என் ஜின் இதனுடன் மோதியவுடன் இதன் துண்டுகள் நாலாபக்கமும் சித றின. சிலிப்பர் கட்டை ஒன்று சேதமடைந்தது. ஆனால் என்ஜினுக்கு எதுவித சேதமும் விளையவில்லை.

யூலை 20 ஆம் திகதி கடுகண்ணுவ ரயில் பாதையில் ஒரு "கராஸ் பிளேட்" வைக்கப்பட்டிருந்ததை பேராதனைப் புகையிரதப் பாதைக் காவலர் கண்டுபிடித்தார். தக்க நேரத்தில் இது அகற்றப்பட்டது.

இத்தகைய சதி நாசகார சம்பவங்கள் பல இடங்களிலும் நடைபெற் றுள்ளன. கௌரவ உப சபாநாயகர் அவர்களே'. இத்தகைய நிலைமைகளை நாம் மாற்றியமைக்க வேண்டாமா? இத்தகைய மனோபாவத்திலிருந்து இம்மக்களை நாம் பாதுகாக்க வேண்டாமா? உண்மையில் ஏகாதிபத்திய அடக்குமுறை ஆட்சியின் கீழ் நாம் மேற்கொண்ட இந்த வேலைநிறுத்த நடவடிக்கையை இப்போது மாற்றியமைக்க முடியாதா என நாம் மீண் டும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். வேற்று நாட்டாருக்கு அடிமைப்பட் டிருந்த காலத்தில் நாம் பின்பற்றிய நடைமுறைகளை மீண்டும் இப்போ தும் செயற்படுத்த எமது மக்கள் முயற்சிக்கின்றார்களா? இவை இயல்பா கவே நடைபெறுவனவா? 10 இலட்சம் பேருள் ஏமாற்றப்பட்ட 40,000 பேருள்ளும் ஒரு மிக மிகச் சிறிய கூட்டத்தினரே, இத்தகைய நடவடிக் கைகளில் ஈடுபடுகின்றார்கள். மேலும் இதற்கான ஆதரவு, வழிகாட்டல் என் பன யாரிடமிருந்து கிடைக்கின்றது. பொறுப்புள்ள ஒரு கூட்டத்தின ருக்கு அவர்கள் தோல்வியடைந்த அரசியல்வாதிகளாயிருந்தாலென்ன தொழிற்சங்க முதலாளிகளாயிருந்தாலென்ன இத்தகைய நிலைமை உரு வாக இடம் வழங்க முடியுமா? இதற்கல்லவா அத்தனகல்ல உறுப்பினர் (திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா) "ஓவர் ரியக்டிங்" என்று கூறு கின்றார். புகையிரதமொன்றைப் புரட்டினால், இரு புகையிரதம் ஒன்றுடன் ஒன்று மோதினால், பஸ்சில் பயணம் செய்யும் பிரயாணிகளைக் காயமடை யச் செய்தால் அது அரசாங்கத்திற்கு அடித்த அடியா? எமது கட்சிக்கு கிடைத்த அடியா? எமது அமைச்சர் ஒருவருக்கு அடித்த அடியா என நான் கேட்கிறேன். இத்தகைய ஒரு வழக்கம் இந்நாட்டில் உருவாவதை நாம் பார்க்க விரும்பவில்லை. அதற்கு நாம் ஆயத்தமுமில்லை. 1983 ற்கு

ஞுண்னர் இச் சமுதாயத்தில் பூரண மாற்றமொன்றை ஏற்படுத்துவதே எமது நோக்கம். அது மனோரீதியான ஒரு மாற்றமாக இருத்தல் வேண்டும். இத்தகைய மாற்றமொன்றை ஏற்படுத்த அரசாங்கத்திலாயிருந்தாலென்ன, எதிர்க்கட்சியிலாயிருந்தாலென்ன பொதுமக்களிடையேயிருந்தாலென்ன தலைவர்கள் என்று கூறுவோர் போஷகர்கள் என்று கூறுவோர் உதாரணமாகத் திகழவேண்டும். நாம் எதிர்க்கட்சியிலிருந்தபொழுது எமது கட்சியினருக்குச் சட்டவிரோதமான அவர்களால் செய்ய முடியாத காரியங்களைச் செய்யுமாறு கூறவில்லை. சிலர் எம்முடன் கோபமும் உற்றனர். எம்முடனிருந்த காடையர் கூட்டம் எம்மிடமிருந்து பிரிந்து சென்ற பின்னர்தான் எமது கட்சிக்குச் சிதேவித்தனம் பிறந்தது. எமது கட்சிக்குள் புகுந்த சிலர் கட்சியைத் தின்று கொண்டிருந்தார்கள். எமது அதிர்ஷ்டத்திற்காக அவர்கள் எமது கட்சியிலிருந்து தள்ளப்பட்டு விட்டார்கள். இவர்கள் சில சந்தர்ப்பங்களில் எமது கட்சிக்கு அவமானத்தையும், தேடித்தந்தார்கள். காடைத்தனத்தில் ஈடுபட்ட இவர்கள் கட்சி தலைமைக்கெதிராகவும் இத்தகைய நடவடிக்கைகளில் இறங்கினார்கள். கட்சி அலுவலகத்திலேயே கட்சித் தலைமைக்கெதிராகக் காடைத்தனம் புரிந்தனர். ஈற்றில் அவர்கள் நீக்கப்பட்டு விட்டனர். அவர்களிடமிருந்து எமது கட்சி பாதுகாக்கப்பட்டது. ஸ்ரீ ல.சு.க. அந்த அழிவைத் தேடிக் கொண்டது. ஒரு குறித்த கூட்டத்தினரைப் பற்றி எமக்குத் தெரியும். அவர்கள் எங்கு சென்று சேருகிறார்களோ அந்த இடம் அழிவின் விளிம்புக்குத் தள்ளப்படும். அச்சுக்கலையில் நன்கு நிபுணத்துவம் பெற்ற எனக்குத் தெரிந்த ஒருவர் இருந்தார். அச்சுக்கலை பற்றி எல்லா அம்சங்களையும் இவர் நன்கு அறிந்து உணர்ந்தவர். ஆனால் எவராவது இவரைத் தமது அச்சகத்துக்குத் தொழிலுக்காகச் சேர்த்தால் 3 மாதம் செல்ல முன்னரே அந்த அச்சகத்தை மூடவேண்டி நேரிட்டு விடும். இத்தகைய துரதிஷ்டம் பிடித்தோர் அரசியல் கட்சிகளிலும் இருக்கிறார்கள். எம்மிடமும் இருந்தார்கள் இப்போது எம்மிடம் இருந்து போய்விட்டார்கள்.

இவர்கள் மீண்டும் புகுந்துகொள்ள முயற்சிக்கிறார்கள். ஆனால் நாம் அவர்களை எடுக்கப்போவதில்லை. எடுத்தால் நமது கதி முடிந்துவிடும். அவர்களை நீங்களே வைத்துக்கொள்ளுங்கள். சூரியப்பெருமா போன்றவர்களை நன்கு அணைத்துக் கொள்ளுங்கள். மடியில் வைத்துத் தாலாட்டுங்கள். சூரியப்பெருமாவுக்கு ஜயவேவா என நாங்கள் கூறுகிறோம். அக்கூட்டத்தினரை நீங்கள் நன்றாக வைத்துக் கொள்ளவும் அவர்களை வைத்து மேடைப் பேச்சுக்களை நிகழ்த்தவும் எங்களுக்கு ஏசவும் அவர்களை உபயோகியுங்கள். அதற்கு நாம் பூரண சம்மதம். இந்த மதவாச்சி உறுப்பினரை (மைத்திரிபால சேனநாயக்க) முடியுமான அளவு ஒதுக்குங்கள். மத்திய கொழும்பு 3 வது உறுப்பினரையும் (திரு. ஹலீம் இஷாக்) முடியு

மானவரை ஒரு பக்கத்திற்கு ஒதுக்குங்கள். அவர்களை அருகில் எடுக்கவும் வேண்டாம். கொத்மலை உறுப்பினரையும் (திரு. ஆனந்த தசநாயக்கா) நீங்கள் தூரத்தில் வைப்பீர்களாயின் அந்தளவுக்கு நாமும் சம்மதம். கொத்மலை உறுப்பினர் அக்கட்சியில் இருக்க இருக்க அக்கட்சிக்கு ஒரு வாக்காவது அதிகமாகக் கிடைக்கும். இதனை வேடிக்கை என நினைத்துக் கொள்ள வேண்டாம். உங்களை அன்றிலிருந்தே எனக்குத் தெரியும். மதவாச்சி உறுப்பினர் முன்னர் ஐ.தே. கட்சி பா.உ. வாக இருந்தவர். எமது கட்சியிலிருந்து விலகியது தொட்டு அக்கட்சியின் உறுப்பினராக இருந்து வருபவர். கொத்மலை பா.உ. வும் அவ்வாறுதான் என்றுலும் தோல்வியடைந்தும் அக்கட்சியிலேயே இருக்கிருர். இருந்தாலும் அந்த துர் அதிர்ஷ்டம் பிடித்தோர் இருக்கும்வரை அக்கட்சி உருப்படாது. ஐ.தே.க.யைப் போன்ற இன்னெரு கட்சி இந்நாட்டின் ஆட்சிப் பொறுப்பைக் கையேற்கும் என நாம் மகிழ்ச்சியுடன் எதிர்பார்த்திருந்தோம். ஆனல் அக்கட்சிக்கு இப்போது நிகழ்ந்துள்ளது என்ன?

நாம் எதனையும் ஒளித்து மறைத்து செய்யவில்லை, என இங்கு கூறி வைக்க விரும்புகிறேன். அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்ட போது நாம் மக்களிடம் சென்று உண்மை நிலையை விளக்கிக் கூறினேம். அன்று இரத்மலானையில் 30, 40 ஆயிரம் மக்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் "இந்த நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களை நிறுத்தி அதற்கு உபயோகிக்கப்படும் பணத்தை பிரித்துத் தருமாறு நீங்கள் கூறுகிறீர்களா? அதன் மூலம் சுக வாழ்க்கையைப் பெற நீங்கள் விரும்புகிறீர்களா? அப்படியெனில் ஒரு ஆளாவது கையை உயர்த்தி அங்ஙனம் கூறுங்கள்" என்று அக்கூட்டத்தில் நான் கேட்டேன். ஆனல் ஒருவராவது அதற்குச் சம்மதிக்கவில்லை. அப்படியில்லாவிட்டால், ஸ்ரீ ல.சு.க. அமுல் செய்த நிருவாக முறையை அறிமுகம் செய்ய விரும்புகிறீர்களா? அப்படியென்றல் அதற்கு நாங்களும் தயார். ஆனல் தேவையான அளவு பொருள்களை இறக்குமதி செய்தல், வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களை இறக்குமதி செய்தல், என்பவற்றுடன் நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளும் நிறுத்தப்பட வேண்டிவரும். அப்படியெனில், திரும்பவும் கியூ யுகம், கூப்பன் காட், பேர்மிட், லைசன்ஸ், கோட்டா முறை என்பனவற்றிற்கெல்லாம் பொதுமக்கள் தயாராக இருத்தல் வேண்டும். இரண்டு கொத்து அரிசிக்கு மேல் பாதையில் கொண்டுபோக முடியாது. தடைபோடும் யுகத்திற்குத் திரும்பிச் செல்ல பொதுமக்கள் தயாராக வேண்டும். எதற்குத் தயார் என்று சொல்லுங்கள். அந்த ஆட்சி முறையை அமுல் செய்வதில் எமக்கு எந்த பிரச்சினையும் இல்லை. நாம் அத்தனகலைக்குச் சென்றபோதும் சொன்னது அதுதான். நாம் போன எல்லா இடங்களிலும் சொன்னதும் அதுதான். எமது பா.உ. க்களுக்கு எனக்கு இச் சந்தர்ப்பத்தைப் பெற்

றுத் தந்தமைக்கு நன்றி செலுத்துகிறேன். நான் இக்கருத்துக்களை இச் சபையில் நாளைய தினம் தெரிவிக்க எண்ணியிருந்தேன். நாளைக்குத்தான் இது தொடர்பான தீர்மானமொன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படவுள்ளது. நாளை எமது ஏனைய அமைச்சர்கள் தேவையானவற்றை விளக்குவர். இப்போது தோன்றியுள்ள நிலைமையின் கீழ் இவ் வாசாங்கம் மேற்கொண்டுள்ள வழிவகைகள் யாவை என என்னிடம் கேட்டார்கள். அதனால்தான் இவ்விஷயங்களை நான் இச்சபையில் முன் வைத்தேன். எமது விருப்பத்திற்கு மாறாக பல கூட்டங்களை நாம் தடைசெய்யவேண்டி ஏற்பட்டது. இதனைத் தவிர எமக்கு வேறு வழியிருக்கவில்லை. குழப்பம், கலகம், கொலை என்பனவற்றிற்கும் அதே போன்று தண்ணீர், மின்சாரம், என்பன இன்றி, வைத்தியசாலைகளில் நோயாளர்களுக்கு மருந்துக ளின்றி, சிகிச்சை வசதிகளின்றி இறந்துபோக அல்லது துன்பப்பட பொறுப்புள்ள ஒரு அரசாங்கம் என்ற வகையில் எம்மால் இடம் வழங்க முடியாது. இடதுசாரிக் கட்சியான கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர், சமசமா ஜக் கட்சியின் தலைவர் ஆகியோர் மட்டுமன்றி ஸ்ரீ. ல. சு. க. தலைவி, பீலிக்ஸ் டயஸ் ஆகியோர் கூட அன்று இந்த அவசரகாலச் சட்ட விதிகளைப்பற்றி "நான் சிறந்த ஒரு செயலைச் செய்துள்ளேன்" என்று கூறினர். அன்று இடதுசாரித் தலைவர் இத்தகைய வேலைநிறுத்தங்களைத் தொடர்ந்து அனு மதித்து நாட்டையும் மக்களையும் அழிவுக்கு இட்டுச்செல்ல வழி செய்ய வேண்டாம். பொதுஜன பாதுகாப்புச் சட்டம் இருக்கையில் இவர்கள் என்ன செய்கிறார்கள்? என்றெல்லாம், அரசாங்கத்திடம் கூறினார்கள். எனவே எல்லாக் கூட்டங்களும் அன்றி சில கூட்டங்களை மாத்திரம் அதா வது பொதுமக்களுக்கு தீங்கு ஏற்படுத்தக்கூடிய கூட்டங்களை மாத்திரம் தடைசெய்ய வேண்டி எமக்கு ஏற்பட்டது. அப்படியின்றி இந்த அழிவை நாம் நிறுத்துவது எங்ஙனம்? இவ்வாறு இத்தீங்கை நிறுத்தாதிருப் பதைத்தான் நீங்கள் அரசாங்கத்திடமிருந்து எதிர்பார்க்கிறீர்களா? நீங் கள் மிகவும் மதிக்கும் இந்தியாவில் இத்தகைய ஒரு நிலை ஏற்பட்ட போது அந்தநாட்டு அரசாங்கம் செய்ததென்ன? சில பகுதிகளில் ஜனாதி பதி ஆட்சி என்ற பெயரில் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. இன்னும் சில இடங்களில் அவசரகாலச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. இன்னும் சில நாடுகளில் இராணுவச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டுள் ளது. அவ்வவ் நாடுகளின் தேவைகளுக்கேற்ப, இவற்றை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எனினும் பெரும்பாலான நாடுகளில் இந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது மக்களின் சம்மதத்துடன் அல்ல. இலங்கை ஒரு ஜனநாயக நாடு. அதனால்தான் இந்த விஷயம் சம்பந்த மாக நாம் இச்சபையின் முன் வந்திருக்கிறோம். கௌரவ அங்கத்தவர்கள் இவ்விஷயம் தொடர்பாக எம்மிடம் கேள்விகள் கேட்டனர். எனவே இவ் விஷயம் தொடர்பாக பூரண விளக்கம் அளித்து அவற்றை சபையின் முன்

வைப்பது எமது கடமை. எத்தனைபேர் வேலை நிறுத்தம் செய்தனர், எங்கெங்கு வேலைநிறுத்தம் நடைபெற்றது போன்ற விஷயங்களை நான் வெளிப்படுத்த வேண்டும். நான் முன்னர் கூறியது போன்று 10 இலட்சம் பேரில் 40,000 பேர் மாத்திரமே இவ் ஏமாற்று வித்தைக்கு அகப்பட்டனர். அவ் வெற்றிடங்களையெல்லாம் நாம் இப்போது நிரப்பி வருகின்றோம். உண்மையில் ஒரு இலட்சத்து அறுபதினாயிரம் வெற்றிடங்கள் ஏற்படும் வண்ணம் இது நிகழவில்லையே என்பதுதான் எமது மனதுக்கு வருத்தமாயுள்ளது. வேலை வங்கியில் அவ்வளவு தொகையினர் இருக்கிறார்கள். மூன்று நான்கு எழுதுவினைஞர்கள் தேவைப்பட்ட விமானப்படை தலைமையகத்தின் முன் காணப்பட்ட கியூவரிசை அத்தகையது. இத்தகைய ஒரு நிலைமை எமது நாட்டில் இருக்கையில் பொதுமக்கள் இப்படிப்பட்ட ஒரு வேலைநிறுத்த நடவடிக்கைக்கு ஆதாவு தருவார்களா? வெற்றிடங்கள் ஏற்பட்ட எல்லா இடங்களிலும் இத்தகைய கியூ வரிசைகள் காணப்பட்டன. அவர்கள் கூறியதெல்லாம், "நாம் வந்து வேலை செய்கிறோம். நாம் வந்து வேலை செய்கிறோம்" என்ற கருத்திலாகும்.

உலகில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக அன்றி, அரசியல் பின்னணியுடன், தீங்கான மனோபாவத்துடன் நேர்மையற்ற நோக்கங்களை எய்தும் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட மக்கள் விரோத பெரும் சதி முயற்சியே இவ்வேலைநிறுத்தம், என்பதை இச் சபையினருக்குக் காட்டுவதே எனது நோக்கம். இச் சதி முயற்சியை முளையிலேயே கிள்ளியெறிய அரசு நடவடிக்கை எடுத்தது. மேலும் இத்தகைய நடவடிக்கைகளை எதிர்நோக்க வேண்டிவரின் என்ன விதத்தில் செயற்படலாம் என நான் எந்த அரசியல் கட்சியினரையும் கேட்கத் தயார். சிலர் இச் சந்தர்ப்பத்தில் நாம் மேற்கொண்ட நடவடிக்கைகளை எடுக்காது விட்டிருப்பார்களானால் அத்தகையோர் பொதுமக்களைப் பற்றிய எத்தகைய பொறுப்போ அக்கறையோ அற்றவர்கள் என நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். எமது கூட்டங்களுக்கு வந்த ஆயிரக்கணக்கான மக்கள், நாம் எடுத்த நடவடிக்கைகளை ஏகமனதாக அங்கீகரித்தனர். எமது கூட்டங்களுக்காக வேண்டி பஸ்களிலும் லொறிகளிலும் கூட்டுறவுச் சங்க வாகனங்களிலும் பொதுமக்களை நாம் அழைத்து வந்தோம் என நீங்கள் கூறினீர்களாயின் அதில் நீங்கள் திருப்திப்படுங்கள். உங்களது அந்த அபிப்பிராயம் சரியா என்பதை அறிந்து கொள்ள விரைவில் பொதுத் தேர்தல் ஒன்று வருகிறது. நாடு பூராவும் 24 மாவட்டங்களிலும் அபிவிருத்திச் சபைகளுக்களுக்குப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்தலுக்கான தேர்தல் விரைவில் நடைபெறவுள்ளது. உங்களால் முடியுமெனில் எமக்கு எதிரான பிரசாரத்தை பொதுமக்கள் முன் கொண்டு சென்று அத்தேர்த

வில் வெற்றி பெறுங்கள். பொதுமக்களின் சம்மதத்தைப் பெறுங்கள். அதற்கு முன்னர் இடைத்தேர்தல் ஒன்று நிகழ்ந்தால் அங்கும் எமக்கெதிரான பிரசாரத்தைச் செய்யுங்கள். நாங்கள் ஒழிந்து கொள்ளமாட்டோம். முன்நின்று, செயற்படுவோம். நாட்டு மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு தூய நோக்கத்துடனேயே இந்நடவடிக்கையை நாம் மேற் கொண்டோம்.

இன்னொரு வினாவுக்கு அமைச்சரொருவர் விடையளிக்க வேண்டி உள்ளதால் நான் இதற்கு மேல் பேச விரும்பவில்லை. நான் எனது நாட்டு மக்களை மிக மேலாக மதிக்கிறேன். தங்களது கடமையில் ஈடுபட்டு இருக்கும், வேலைசெய்யும் இலட்சக்கணக்கான மக்களுக்கு எமது நன்றி அறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம். இச் சந்தர்ப்பத்தில் விஷயத்தைச் சரியாகப் புரிந்து கொண்டு "இலஸ்டிரேட்டர் விக்லி" சஞ்சிகையில் இருந்து நான் குறிப்பிட்ட மாதிரி பணவீக்கம் காணப்பட்டாலும் கூட அதற்கு அஞ்சாது, பணவீக்கம் ஏற்படுவது எமக்கு தீங்கு என்றாலும் அதனை நன்மையாக மாற்றிக்கொண்டு செயற்படுவதே இன்றைய நிலையில் அவசியமானது. எனவே அப்பந்தியை நான் மீண்டும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். "பணவீக்கமானது பொதுமக்களுக்குச் சில துன்பங்களை ஏற்படுத்துகிறதென்பதை நாம் உணர்கிறோம். ஆனால் இப்பணவீக்கமின்றி பாரிய முதலீடுகளையும் மற்றும் அபிவிருத்தி சமூக நிதி செயற்றிட்டங்களையும் நிதிப்படுத்த முடியாதென்றபடியால் பொதுமக்கள் இதனைத் தாங்கிக்கொள்ளத்தான் வேண்டும். இத்தகைய திட்டங்கள் எமது நாட்டிற்கு அத்தியாவசியமானவை. பணவீக்கமானது உலகின் எல்லா நாடுகளிலும் காணப்படும் உலகளாவிய ஒன்றாகும். எனவே இந்தியா எவ்வாறு அதிலிருந்து தப்ப முடியும்? அது தவிர்க்க முடியாதது. இப்பிரச்சினையைத் தீர்க்க முன்வைக்கப்பட்ட எல்லாத் தீர்வுகளும் ஏதாவது கஷ்டங்களை எற்படுத்தவே செய்கின்றது.. ஆகவே நாம் இதைப்பற்றி ஏதாவது செய்ய நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கும் அதே வேளை நீங்களும் அதிக முறைப்பாடுகள் இன்றி அதனுடன் வாழப்பழகிக் கொள்ளுதல் நன்று".

நாமும் அதிக புகார்கள் செய்யப்போவதில்லை. அதனை எதிர்நோக்க நாமும் தயார். நாம் இந்த 3 வருடங்களிலும் தொடங்கியுள்ள இந்த அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்தும் நிறைவு பெற்றவுடன், 1983 ஆம் ஆண்டு இந்நாட்டுப் பொதுமக்கள் வாக்குச் சாவடிக்குச் செல்லுகையில் 1977 ஆம் ஆண்டு யூலை மாதம் 21 ந் திகதியைவிட, செழிப்பான சௌபாக்கியமான அபிவிருத்தி நிறைந்த சகல வசதிகளும் கொண்ட இலங்கை நாட்டில் அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பது அவர்களுக்கு நிச்சயம் தெரியவரும்.

ශ්‍රී ලංකා විශ්ව විද්‍යාලය.
இலங்கைப் பல்கலைக்கழகம் யாழ்ப்பாண
நூலகம்

கௌரவ பிரதமர் ஆர். பிரேமதாச அவர்கள்

1980 ஜூலை 24ம் திகதி

பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையிலிருந்து
தொகுக்கப்பட்டது

அரசாங்க வெளியீட்டு திணைக்களத்தினால்
வெளியிடப்பட்டது

---

இலங்கை அரசாங்க அச்சுத்திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.